உகந்ததல்ல. பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவிலிருக்கும் காலத்தில் அவனவன் கர்மாவுக்கேற்ப சுகத்தையும் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டுமே தவிர அதை மாற்ற யாராலும் முடியாது. சில பரிகாரங்களால் செய்த கர்மாவின் தவிப்பை குறைக்க முடியுமே தவிர காலத்தின் கோலத்தை நிறுத்த முடியாது. உங்களின் இந்த உறவு உண்மை என்றால் முற்பிறவியில் உனக்கு யாரோடு என்ன உறவு, வரும் பிறவியில் யாரோடு என்ன உறவு சொல்ல முடியுமா? இதைத் தெரிந்துகொள்ளாமல் வீணாக நீ வேதனைப்படுவது ஏன்? இப்படி அழியக்கூடிய இந்தத் தோல் பொம்மைகளுக்காகவா நீ வேதனைபடுகிறாய். ஆதலால் இனியாவது உன் சோகத்தை கட்டுப்படுத்தி பிறப்பு, இறப்பு என்ற இந்த சுழலிலிருந்து விடுபடுவதற்கு முயற்சி செய்" என்றார். அதைக் கேட்ட சாவித்திரி தன்னை தேற்றிக் கொண்டு "அய்யா எனக்கு இந்த சுழலிலிருந்து மீள்வதற்கு தக்க மார்க்கத்தை தெரிவியுங்கள். நீங்கள் கூறியபடியே செய்கிறேன் என்று வேண்டினாள்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*





*திகம்பரா திகம்பரா ஸ்ரீபாதவல்லப திகம்பரா!*

## அத்தியாயம் 31

அப்பொழுது சித்தபுருஷர் பதிவிரதையான சாவித்திரியிடம் பெண்கள் பின்பற்ற வேண்டிய தர்மங்களைப் பற்றி சொல்ல ஆரம்பித்தார். "முன்பு காசியில் அகத்திய முனிவர் அவர் மனைவி பதிவிரதை லோபமுத்திரையுடன் வாழ்ந்து கொண்டிருந்தார். அங்கே இருந்த விந்திய மலை அகத்தியருக்குப் பணிந்து அவர் சீடரைப் போல் இருந்தது.

ஒருநாள் நாரதர் விந்திய மலையிடம் வந்து நீ எல்லா விதத்திலும் மேலானவர். ஆனால் உயரத்தில் மேருமலையைவிட குறைவானவர் என்று சொன்னார். அதைக் கேட்ட விந்திய மலை ஆத்திரம் கொண்டு மேருமலையைவிட உயரமாக வேண்டுமென்று நினைத்து தன் உயரத்தைப் பெறுக்கிக் கொண்டே போயிற்று. ஆதலால் விந்திய மலைக்குத் தெற்கு புறமிருக்கும் இடமெல்லாம் கதிரவன் ஒளி படாமல் இருட்டாக ஆயிற்று. இதனால் அங்கு வாழ்கிற மக்களின் அன்றாட வேலைகள் முடங்கிவிட்டன. இதைப் பார்த்த முனிவர்கள் தேவர்களின் அதிபரான இந்திரனிடம் சென்று இந்த அவலத்தைப் பற்றி முறையிட்டார்கள். இந்திரன் தன்னால் எதுவுமே செய்யமுடியாதென்று கூறி அவர்களுடன் பிரம்மாவிடம் சென்று நடந்ததைக் கூறி இந்த ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுங்களென்று வேண்டினார்கள். அப்பொழுது பிரம்மா யோசித்து காசியிலிருக்கும் அகத்திய முனிவரிடம் சென்று தெற்குத் திசையில் வாழும் மக்களுக்கு நன்னெறியை கூற யாருமில்லை. நீங்கள் அங்கு சென்று வசிக்க வேண்டுமென்று வேண்டுங்கள். ஆதலால் அவர் தெற்குத் திசைக்கு வருவதால் விந்திய மலை பணிந்து தன் உயரத்தை குறைத்துக் கொள்ளும் என்று கூறினார்.

அதைக் கேட்டு தேவர்களெல்லாம் அகத்திய முனிவரிடம் சென்று அந்த தம்பதிகளை வணங்கி பூஜை செய்தார்கள். அப்பொழுது பிரஹஸ்பதி அகத்தியரையும் அவர் மனைவியான

லோபமுத்திரையையும் புகழ்ந்து, அவர்களின் இந்தப் புகழுக்கும் பெருமைக்கும் காரணம் அந்த அம்மையாரின் பதிவிரதா தர்மம்தான்" என்றார். அதைக் கேட்ட தேவர்கள் பிரஹஸ்பதியிடம் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய பதிவிரதா தர்மங்களைப் பற்றி விவரமாக கூறுங்கள் என்று வேண்டினார்கள்.

பிரஹஸ்பதி அவர்களிடம் "கணவனை எப்பொழுதும் ஸ்ரீஹரி போல் நினைத்து பூஜிக்க வேண்டும். கணவன் சாப்பிட்ட பிறகுதான் அந்த இலையில் மட்டும்தான் சாப்பிடவேண்டும். கணவனுக்கும், அதிதிகளுக்கும், சோர்வு என்று நினைக்காமல் சேவை செய்ய வேண்டும். முடிந்தவரையில் அக்கம் பக்க வீடுகளுக்கு போகக்கூடாது. அப்படிப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டால் தலைகுனிந்து செல்ல வேண்டும். கணவனின் சொல்லைத் தட்டாமல் இருக்க வேண்டும். படுக்கை அறையில் கணவனை சந்தோஷமடையச் செய்து அவர் உறங்கியபிறகு அவள் உறங்க வேண்டும். கணவனில்லாமல் தனியே விழாக்களுக்கென்றும் யாத்திரைகளுக்கென்றும் போகக்கூடாது. கணவன் வீட்டிலிருக்கும் பொழுதுதான் நகைகளை அலங்கரிக்க வேண்டும். அவர் வீட்டிலிருக்காமல் வெளியூர்களுக்கு போனபொழுது நகைகளை அலங்கரிக்கக்கூடாது. கணவனின் பெயரை மனைவி உச்சரிக்கக்கூடாது. கணவன் தூக்கத்திலிருந்து எழுவதற்கு முன்பே எழுந்து வீட்டை சுத்தம் செய்து நீராடி கணவனை தெய்வம் போல் நினைத்து பூஜை செய்யவேண்டும். கணவன் சந்தோஷமாக இருக்கும் நேரத்தில் மனைவி துயரமாக இருக்கக்கூடாது. அவர் துயரமாக இருக்கும் பொழுது அவள் சந்தோஷமாக இருக்கக்கூடாது. கணவன் கோபமடைந்தால் மன்னிக்கவேண்டுமென்று வேண்ட வேண்டும். அவர் கோபத்தில் சொன்ன வார்த்தைகளை மனதில் வைத்துக் கொள்ளக்கூடாது. கணவனின் ஆயுள் பெருகுவதற்காக மஞ்சள், குங்குமம், மாங்கல்யம் ஆகியவற்றை பக்தியுடன் இடவேண்டும். ஒழுக்கமில்லாத பெண்களுடனும், கணவனை மதிக்காத பெண்களுடனும் பதிவிரதை



உறவு வைத்துக் கொள்ளக் கூடாது. மாமியார், மாமனார், மைத்துனர், நாத்தனார் முதலானவர்களை விட்டு தனிக்குடித்தனம் போக வேண்டுமென்று நினைக்கக் கூடாது. கணவனுக்குப் பிடித்தமான ஆடைகளையே உடுத்த வேண்டும். கணவன் சந்தோசமாக இருக்கும்படி நடந்து கொள்ள வேண்டும். கணவன் செல்வம் இல்லாதவரானாலும் ஆண்மையில்லாதவன் ஆனாலும் வியாதி உள்ளவரானாலும் அவரைத் தெய்வம் போல் நினைத்து அவருடன் வாழவேண்டும். கணவனிடம் எது இருக்கிறதோ அதற்கேற்ப வாழவேண்டும். வசதி படைத்தவர்களைப் போல் தங்களுக்கு இல்லை என்று குறை கூறக்கூடாது. மற்ற ஆண்களை காமத்துடன் பார்க்கக்கூடாது. அப்படி செய்தால் மகாபாவம் ஒட்டிக் கொள்ளும்.

இப்படி நடந்துக் கொள்ளும் பதிவிரதா பெண்களை தேவர்கள் கூட வணங்குவார்கள். தீய நடத்தையுள்ள பெண்களால் அவர்களின் வம்சமெல்லாம் பாவம் சூழ்ந்து கொள்ளும். பதிவிரதைகளால் வம்சமெல்லாம் மேன்மையடையும். அப்படிப்பட்ட பதிவிரதைகளை மணமுடிப்பவனுக்கு எல்லா வளமும் கிடைக்கும். அப்படிப்பட்ட மனைவியில்லாமல் யக்ஞங்கள், பூஜைகள், யாகங்கள் செய்யக்கூடாது. அப்படிப்பட்ட பதிவிரதையை கண்டு பூமியும் தன் கடினத்தை விட்டு அவள் பாதங்களின் அடியில் மென்மையாக மாறிவிடும். அவளுடன் வாழ்வதினால் ஏழு பிறவிகளின் பாவங்கள் கூட அகன்றுவிடும். கங்கையில் நீராடிய புண்ணியம் பதிவிரதையை பார்ப்பதினாலேயே வரும்" என்று சொன்னார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 32

மேலும் சாவித்திரியிடம் "அம்மா கணவன் இறந்தால் மனைவி அவருடன் உடன்கட்டை ஏறுவது மிக நல்லது. ஆனால் கணவர் வேறு ஊரிலோ அல்லது மிகத் தொலைவிலான இடத்தில் இறந்து அல்லது அவரது பிணம் கிடைக்காமல் போனாலும், பால் குடிக்கும் குழந்தை இருந்தாலும், கர்ப்பமாக இருந்தாலும் உடன்கட்டை ஏற வேண்டியதில்லை. அப்படியான பெண் வாழ்வு முழுவதும் விதவையாக இருந்து விதவா தர்மங்களைப் பின்பற்ற வேண்டும். அப்படிச் செய்தால் அவளுக்கு உடன்கட்டை ஏறிய பயன் கிடைக்கும். விதவா தர்மங்கள் என்னவென்றால் கணவன் இறந்தபிறகு தலைமுடியை அகற்றிவிட வேண்டும். அப்படிச் செய்யாமல் முடிகளுடன் இருந்தால் அந்த முடிகள் அவரை கட்டி போட்டது போல் ஆகிவிடும். தினமும் தலையில் தண்ணீர் விட்டு நீராட வேண்டும். ஒரு வேளைதான் சாப்பிட வேண்டும். உயிர் காப்பதற்கு எவ்வளவு உணவு தேவையோ அது மட்டுமே சாப்பிட வேண்டும். முதியோர்கள், குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் பெண்கள், நோயாளிகள் இரண்டாவது வேளையில் பாலோ பழமோ வாழ்நாள் முழுவதும் சாப்பிடலாம். கட்டில் மேல் படுக்கக்கூடாது. தரையில் பாய் அல்லது போர்வை போட்டு படுக்க வேண்டும். தங்களின் படுக்கை, மெத்தைகளை ஏழைகளுக்குக் கொடுத்துவிட வேண்டும். சந்தனம், பூ, தாம்பூலம் முதலிய வாசனைப் பொருட்களை விட்டுவிட வேண்டும். வண்ண சேலைகளை உடுத்தாமல் வெள்ளை நிற சேலையை உடுத்த வேண்டும். ரவிக்கைகளை உடுத்தக்கூடாது. ஆண் பிள்ளை இல்லாதவர்கள் அவளே தன் கணவனின் கோத்திரம் முதலியவை சொல்லி தினமும் தர்ப்பனம் விட வேண்டும். வைகாசி, கார்த்திகை, தை மாதங்களில் கடலிலும், நதிகளிலும் நீராடினால் நல்லது. வைகாசியில் தண்ணீர், கார்த்திகை மாதத்தில் தீபம், தைமாதத்தில் எள், நெய் தானம் செய்ய வேண்டும். கடவுளை பூஜிக்கும் பொழுது



தன் கணவரின் ரூபத்தையும் நினைத்து பூஜிக்க வேண்டும். கணவனுக்கு பிடித்த பொருட்களை பிராமணர்களுக்குத் தானம் செய்ய வேண்டும். வெய்யில் காலத்தில் தண்ணீர் பந்தல்களை வைக்க வேண்டும். குளிர் காலத்தில் போர்வைகளை ஏழைகளுக்குத் தானம் செய்ய வேண்டும். ஈசுவரனின் ருத்திராபிஷேகத்திற்கு தண்ணீருடன் குடங்களைக் கொடுக்க வேண்டும். அதிதிகளுக்கு தங்களின் சக்திக்கேற்ப அன்னமிடவேண்டும். யாத்திரைகளுக்குச் செல்பவர்களுக்கு குடை, செருப்பு, போர்வை முதலியவை கொடுக்க வேண்டும். எந்த தானம் செய்தாலும் கணவனின் பேரைச் சொல்லி தானம் செய்ய வேண்டும். இதனால் நரகத்திலிருக்கும் கணவர் சொர்க்கத்திற்கு செல்வார். வெண்கலப் பாத்திரம் நிறைய நெய்யுடன் பிராமணர்களுக்கு தானம் செய்ய வேண்டும். கொடுக்கும் சக்தி உள்ளவர்கள் வருடம் முழுவதும் சரியான சாப்பிடும் பொருட்களுடன் வீட்டை சத்பிராமணருக்கு தானம் செய்தால் மிக நன்று. சந்தனம், பூக்களுடன் கேசவனை பூஜை செய்ய வேண்டும். சிவாலயங்களில் சங்கருக்கு பிரியமுடன் தீபங்கள் கொடுக்க வேண்டும். மகன் இருப்பவள் அவன் சொல்லுக்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். இப்படி வேதங்களில் சொன்னபடி யார் செய்கிறார்களோ அவர்களுக்கு உடன்கட்டை ஏறிய பயன் கிடைக்கும். அப்படிச் செய்யும் பெண் தன்னுடைய புண்ணியத்தினால் கணவன் நரகத்திலிருந்தாலும் அவன் சொர்க்கத்திற்குச் செல்வான். பதிவிரதையான பெண் கங்கைக்குச் சமம். அவளின் கணவர் ஈசனுக்குச் சமம். ஆகையால் இப்படிப்பட்ட தம்பதிகள் உலகில் எல்லோராலும் பூஜிக்கப்படுவார்கள்" என்று பிரஹஸ்பதி தேவர்களுக்குச் சொன்னார். என்று அம்முனிவர் சாவித்திரியிடம் கூறினார்.

மேலும் அவர் "அம்மா உனக்குப் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களைப் பற்றி விவரமாக கூறினேன். இதில் இரண்டு வழிகள் இருக்கின்றன. அதில் உத்தமமான உடன்கட்டை ஏறுவது மிக நல்லது. அதற்கு தைரியம் இல்லை எனில் விதவையாக வாழ்" என்று

கூறி தன் கையை அவள் தலைமேல் வைத்து ஆசி வழங்கினார். அப்பொழுது சாவித்திரி அம்முனிவரிடம் “மாமுனிவரே இந்த இடத்தில் எனக்கு நீங்கள் தான் தாயும், தந்தையும், உறவினரும். நான் இந்த வெளிநாட்டில் தனிமையில் அகப்பட்டிருக்கிறேன். கன்னிப்பருவத்திலிருக்கும் நான் விதவையாக இருப்பது மிகக் கடினம். கன்னிப் பருவத்துடன் வாழ்வதினால் எனக்கு நிந்தனைகள் வரக்கூடும். ஆகையால் உடன்கட்டை ஏறுவதே நல்லது என்று கூறி அவர் பாதங்களை தொட்டு வணங்கினாள். அம்முனிவர் அவளைத் தூக்கி ஆசி வழங்கி “அம்மா பெண்களுக்கு உத்தமமான வழியைத்தான் தேர்ந்தெடுத்தாய். மிக விரைவில் உன் கணவருடன் சேருவாய். நீ ஸ்ரீகுருவின் ஆசியுடன் உன் கணவரை குணமாக்க வேண்டுமென்று இவ்வளவு தூரம் வந்தாய். ஆனால் விதி வசத்தால் நடக்கக்கூடாதது நடந்தது. எப்படி இருந்தும் ஸ்ரீகுருவை பார்க்காமல் போவது நல்லதல்ல. ஆகையால் ஒருமுறை நதிக்கரையில் இருக்கும் அவரைத் தரிசனம் செய்து, பிறகு நீ எண்ணியதைச் செய்துவிடு” என்று கூறி அந்தப் பிணத்தின் தலையில் விபூதியை வைத்து அவளிடம் நான்கு ருத்திராட்சைகள் கொடுத்து இவற்றில் இரண்டை அவனின் கழுத்திலும், இரண்டை இரண்டு காதுகளிலும் கட்டிவிட்டு, ஸ்ரீகுருவிடம் சென்று ருத்திர ஸுக்தத்தால் அவர் பாதங்களுக்கு அபிஷேகம் செய்து அந்த நீரை கொண்டு வந்து இவர்மேல் தெளித்துவிடு. பிறகு சுமங்கலிகளுக்கும் வேத பிராமணர்களுக்கும் உன் சக்திக்கேற்ப தானங்கள் அளித்து, பின் உடன்கட்டை ஏறலாம்” என்று கூறி சென்றுவிட்டார்.

அப்பொழுது சாவித்திரி கர்ம காரியங்களை செய்யக்கூடிய பிராமணர்களை அழைத்து அங்கு செய்ய வேண்டிய சாத்திர விதிகளைச் செய்து, நீராடி, மஞ்சள், பாராணி, குங்குமம், நகைகளுடன் தன்னை அலங்கரித்துக் கொண்டு பிணத்தை நதிக்கரைக்கு கொண்டு செல்லலானாள். அவளே தன் கையில் நெருப்பை தூக்கிக் கொண்டு பிணத்தின் முன்பு நடந்து போகலானாள்.



மிக அழகியான கன்னி பருவப் பெண் ஒருத்தி மகாலெட்சுமி போல் அலங்காரம் செய்துக் கொண்டு உடன்கட்டை ஏறுவதற்கு செல்கிறது என்று அந்த ஊர் மக்கள் தெரிந்து கொண்டு அவளைப் பார்க்கத் திரளாக வந்தார்கள். அவர்களில் சிலர் இந்த சிறு வயதில் எந்த சுகமும் பெறாமல் ஆனந்தமாக கணவருடன் நெருப்பில் உடன்கட்டை ஏறுவதற்கு செல்கிறதே என்று நினைத்தார்கள். சிலர் அவளிடம் சென்று “ஏனம்மா இந்தச் சிறுவயதில் இப்படிச் செய்கிறாய். உன் பிறந்த வீட்டிற்கு போகலாமல்லவா?” என்று சொன்னார்கள். அவளோ அவர்களுக்குப் பதிலேதும் சொல்லாமல் மன உறுதியுடன் முன்னேறி போய்க் கொண்டிருந்தாள். அதில் சிலர் “ஆகா, தர்மத்தை கடைப்பிடிக்கும் இவள் பதிவிரதை. பெண்களுக்கெல்லாம் இவள் வழிகாட்டி ஆவாள். இவளைப் பெற்றவர்கள் எவ்வளவு புண்ணியம் செய்தார்களோ, உடன்கட்டை ஏறுவதினால் இருபத்தொரு தலைமுறையினரை மேன்மையடையச் செய்கிறாள் என்று புகழ்ந்தார்கள். எல்லோரும் பிணத்துடன் நதிக்கரைக்கு வந்தார்கள். அங்கு சிதையை தயார் செய்து அதன் மேல் பிணத்தை வைத்தார்கள். அங்கு அவள் சுமங்கலிகளுக்கு மஞ்சள், குங்குமம், கண்ணாடி முதலிய சுமங்கலப் பொருட்களை தானம் செய்தாள். பிராமணர்களுக்கு பணம் தானமாகக் கொடுத்தாள். எல்லோரையும் வணங்கி புன் சிரிப்புடன் “எனக்கு அனுமதி கொடுங்கள். எனக்கு தீபாவளி நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதற்காக தாய் தந்தையர்கள் என்னை வரவேற்கயிருக்கிறார்கள். சங்கரன் என் தந்தை. கௌரிதேவி என் தாய்” என்று ஊர்காரரிடம் கூறி தன்னோடு வந்தவர்களிடம் “நீங்கள் நம் கிராமத்திற்குச் செல்லுங்கள். எங்களைப் பற்றி வேதனைப்படாதீர்கள். என் மாமியார், மாமனாரிடம் நாங்கள் சுகமாக இருப்பதாகக் கூறுங்கள். இந்த உண்மை தெரிந்தால் அவர்கள் இறந்துவிடுவார்கள். அந்தப் பாவம் உங்களைச் சேரும்” என்று கூறி அம்முனிவர் சொன்னதைப் போல் பிணத்தின் காதுகளுக்கு இரண்டு ருத்திராட்சைகளும் கழுத்தில் இரண்டு

ருத்திராட்சைகளும் போட்டு அங்கிருந்த பிராமணர்களிடம் "அய்யா நான் ஸ்ரீகுரு தரிசனம் செய்ய இங்கு வந்தேன். ஆதலால் அவரை பார்த்து வந்து பிணத்துடன் நான் உடன் கட்டை ஏறி எரிந்து விடுவேன். ஆகையால் எனக்கு அனுமதி கொடுங்கள்" என்று வேண்டினாள். அவர்கள் அம்மா கதிரவன் மறைவதற்குள் சிதைமூட்டுமாறு பார்த்துக் கொள் என்றார்கள். அவள் அப்படியே செய்கிறேன். என்று கூறி ஸ்ரீகுருவை பார்ப்பதற்குச் சென்றாள்.

அங்கே கூடியிருந்தவர்களும் என்ன நடக்கப்போகிறதோ என்ற ஆவலுடன் சென்றார்கள். சாவித்திரி அப்படி செல்கையில் மனதில் ஸ்ரீகுருவை ஸ்ரீகுருவே நீங்கள் முக்காலங்கள் அறிந்த மும்மூர்த்திகள். உலகை ஆளும் மகான். காப்பாற்றுங்கள் என்று வேண்டியவர்களை காத்தவர். முக்குணங்களுக்கு அப்பார்பட்டவர். ஆனால் நானோ துர்பாக்கியசாலி. ஆதலால் உங்கள் கருணை என் மீது விழவில்லை. நீங்கள் பக்தர்களின் கல்பவிருட்சம் (வேண்டியதை தரும் மரம்) என்று தெரிந்து என் கணவரை மீட்க இவ்வளவு தொலைவு நடந்து உங்களிடம் வந்தேன். ஆனால் உங்களை வேண்டி வந்தவர்களுக்கெல்லாம் கிடைத்த பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. இதில் நான் என்ன தவறு செய்தேன். இதுநாள் வரை நான் உங்களை வேண்டி பூஜைகள், விரதங்கள் செய்தேன். அவையெல்லாம் வீணாகப் போய்விட்டன. உங்கள் புகழை தெரிந்து உங்களை நம்பி இங்கு வந்ததற்கு எல்லாம் நன்றாக நடந்தது. இந்த உங்கள் புகழை மேலோகத்திற்கும் என் கணவருடன் சேர்ந்து கொண்டு செல்வேன் என்று எண்ணிக் கொண்டு சங்கமத்தை அடைந்தாள்.

அங்கு ஸ்ரீகுரு தேதீப்யமான ஒளியுடன் பிரகாசமாக இருந்ததைப் பார்த்த உடனே தன்னுள் அபாரமான பக்தி எழும்பி அங்கிருந்த சுவாமியை சாஸ்டாங்கமாக வணங்கினாள். ஸ்ரீகுரு அவளை 'தீர்க்க சுமங்கலி பவ' என்று ஆசீர்வதித்தார். இதைக்கேட்ட அங்கிருந்தவர்கள் தமக்குள் தாமே சிரிக்கச் செய்தார்கள். அவர்களில்



ஒருவன் தைரியமாக ஸ்ரீகுருவிடம் "சுவாமி இவளின் கணவன் மரணமடைந்து அவன் பிணத்தை சுடுகாட்டில் உடன் கட்டை ஏற அங்கு வைத்து உங்களை தரிசித்து போகலாமென்று இங்கு வந்தாள். ஆகையால் இவள் எப்படி சுமங்கலியாக இருப்பாள்" என்று கேட்டான். அதற்கு சுவாமி "நான் எப்பொழுதும் பொய் சொல்லமாட்டேன். இவள் தீர்க்க சுமங்கலியாக இருக்க வாய்ப்புள்ள பொழுது இவள் கணவன் எப்படி இறந்துவிடுவான்.? ஆகையால் அவரின் சடலத்தை இங்கே கொண்டுவாருங்கள் பார்க்கலாம்" என்றார். உடனே ஆச்சரியத்துடன் அங்கிருந்தவர்கள் பிணத்தை எடுத்துவர ஓடினார்கள்.

நான்கு பிராமணர்கள் சுவாமியின் பாதங்களுக்கு ஷோடஸோபசாரங்களுடன் (ஆறு விதமான) ருத்திராபிஷேகம் செய்ய ஆரம்பித்தார்கள். இதற்குள் அந்தப் பிணத்தை சுவாமி அருகில் கொண்டு வந்தார்கள். அப்பொழுது ஸ்ரீகுரு பிணத்தின் மேலிருக்கும் துணியை எடுக்கச் சொல்லி அதன் மேல் தன் பாதங்களிலிருந்த அபிஷேகம் செய்த நீரை எடுத்து தெளித்து தங்களின் அமிர்தமான கண்பார்வையை கிருபையுடன் அவனை நோக்கி சில வினாடிகள் பார்த்தார். அவரின் அமிர்த பார்வை பட்டவுடனே அவன் உடல் அசைய ஆரம்பித்து உயிர் வந்தது. அவன் மெல்ல கண்களை திறந்து தூக்கத்திலிருந்து எழுவதைப் போல் மெல்ல எழுந்து உட்கார்ந்தான். அவன் சாவித்திரியைப் பார்த்து "இது என்ன? நான் இந்த 'பாடை' யின் மேல் இருக்கிறேன். ஏன் நான் இவ்வளவு நேரம் தூக்கத்திலிருந்தேன். இந்த யதிகள் யார்? என்னை ஏன் எழுப்பவில்லை?" என்று கேட்டான். சாவித்திரி புன்சிரிப்புடன் இதுவரை நடந்ததை எல்லாம் விவரமாக விவரித்தாள். அவ்விருவரும் ஸ்ரீகுருவின் பாதங்களில் மேல் தங்களின் சிரங்களை வைத்து வணங்கி ஆனந்தக் கண்ணீருடன் அவர் பாதங்களை அபிஷேகம் செய்து "பராத்பரா! மும்மூர்த்திகளின் அவதாரமே! சரணம் அடைந்தவர்களை காப்பாற்றுபவரே! உலக நாயகனே! சச்சிதானந்த மூர்த்தியே! போற்றி, போற்றி!! பாவங்கள் செய்து பிறந்த எங்களை காப்பாற்றி மறு பிறவி இல்லாமல்

செய்யுங்கள். உங்களின் கருணையினால் இறந்தவர் உயிரை பெற்றதினால் உங்களை சரணமென்று வேண்டுகிறோம்!" என்று துதித்தார்கள். ஸ்ரீகுரு அவர்களை ஆசீர்வதித்து "உங்கள் தோசங்களெல்லாம் போய்விட்டன. நீங்கள் நீண்ட ஆயுளுடன் எட்டுப் பிள்ளைகளை பெற்று நலமுடன் வாழ்ந்து முக்தி அடைவீர்கள்" என்று ஆசி வழங்கினார்.

இதைப் பார்த்து அங்கு கூடியவர்கள் "ஜெயம், ஜெயம்" என்று போற்றி சுவாமியை வணங்கினார்கள். அதில் ஒரு குதர்க்கமான பிராமணர் முன்னே வந்து "சுவாமீ பிரம்மா எழுதிய தலை எழுத்தை யாராலும் மாற்ற முடியாது என்று வேதங்களும், சாத்திரங்களும் சொல்கின்றன. இப்படியிருக்க இந்த பிராமணர் ஆயுள் தீர்ந்து இறந்த பிறகு மறுபடியும் எப்படிப் பிழைத்தான்." என்று கேட்டான். அதற்கு ஸ்ரீகுரு "இவனுக்கு இந்தப் பிறவியில் முப்பது வருடங்கள் ஆயுள் என்றாலும் அடுத்தப் பிறவி நீண்ட ஆயுளுடையவன். ஆகையால் அடுத்த பிறவியிலிருந்து முப்பது வருடங்கள் இந்தப் பிறவிக்கு மாற்றும்படி வேண்டினேன், ஆதலால் இவன் மீண்டும் உயிர் பெற்றான், தவிர பிரம்மா எழுதிய தலை விதியை மாற்ற முடியாது" என்று கூறினார். அங்கிருந்தவர்கள் ஸ்ரீகுருவின் மனிதர்களுக்கு அப்பார்ப்பட்ட சக்தியையும், மகிமையையும் கண்டு வியப்படைந்து சந்தோசத்துடன் அவர்களின் வீடுகளுக்கு திரும்பிச் சென்று விட்டார்கள். இப்படி ஸ்ரீகுருவின் புகழ் உலகமெங்கும் பரவியது. அந்தத் தம்பதிகள் ஸ்ரீகுருவுடன் மடத்துக்குச் சென்று விட்டார்கள்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*





*திகம்பரா திகம்பரா ஸ்ரீபாதவல்லப திகம்பரா!*

## அத்தியாயம் 33

நாமதாரகன் சித்த முனியிடம் மேலும் என்ன நடந்தது, சொல்லுங்கள் என்று வேண்டினான். அதற்குச் சித்தமுனி அவர்கள் இருவரும் மறுநாள் காலையில் சுவாமியிடம் சென்று கைகள் கூப்பி சாவித்திரி "சுவாமி இவர் இறந்து நான் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு யதீசுவரன் வந்து எனக்கு தர்மத்தைச் சொல்லி நான்கு ருத்திராட்சைகளைக் கொடுத்து இவர் கழுத்திலும் காதுகளிலும் கட்டச் சொல்லி பிறகு உங்களைத் தரிசனம் செய்துகொண்டு இவருடன் உடன்கட்டை ஏறச் சொன்னார். அவர் கூற்றுப்படி செய்ததினால் இந்தப் பாக்கியம் கிடைத்தது. அவர் யார்? அவரை மீண்டும் நாங்கள் இங்கு எங்கும் பார்க்கவில்லையே. இந்தச் சந்தேகத்தை தீர்க்க வேண்டும்" என வேண்டினாள். அதற்கு சுவாமி "மகளே,உன்னுடைய பதிபக்தியை கண்டறிய நான் தான் அங்கு வந்தேன். அந்த ருத்திராட்சைகளின் மகிமையினால்தான் உங்களுக்கு இந்த சுபம் நடந்தது. நீ என் பக்தை ஆனதால் உனக்கு ருத்திராட்சையின் மகிமையைச் சொல்கிறேன் கேள்.

சிரத்தையுடன் ருத்திராட்சையை யார் போட்டுக் கொள்கிறார்களோ அவர்களின் பாவங்கள் தீர்ந்துவிடும், மற்றும் பெரும் புண்ணியம் கிடைக்குமென்று 'ஸ்ருதி' 'ஸம்ருதி' யும் கூறுகின்றன. ஆனால் ருத்திராட்சையை போட்ட பிறகு பாவச் செயல்கள் செய்யக்கூடாது. ஆயிரம் ருத்திராட்சைகள் போட்டுக் கொண்டால் அவன் ஈசனுக்கு ஒப்பாவான். அப்படிக் கிடைக்கவில்லை என்றால் புஜங்களுக்கு பதினாறு விதமும் தலைமுடியில் ஒன்று, கைகளுக்கு இருபத்தி நான்கு வீதம், கழுத்தில் முப்பத்திரண்டு, காதுகளில் ஆறுவிதம், தலையில் நாற்பத்திரண்டு, மார்பில் நூற்றி எட்டாகப் போடுபவன் குமாரசுவாமிக்கு ஒப்பாவான். அவைகளுடன் பவழம், ஸ்படிகம், வைடூரியம் முதலியவை சேர்த்து மாலையாக போடலாம். ருத்திராட்ச மாலையுடன் ஜபம் செய்தால் எண்ணற்ற

பலன் கிடைக்கும். ருத்திராட்சை போடாதவனின் வாழ்வே வீண். அவை காதுகளில் போட்டு நீராடினால் கங்கையில் நீராடிய புண்ணியம் கிடைக்கும். ஏகாதச ருத்திர மந்திரங்களுடன் ருத்திராட்சையை அபிஷேகம் செய்தால் ருத்திரனை (ஈசனை) பூஜை செய்த பலன் வரும். ருத்திராட்சைகளில் ஒரு முகம் முதல் இருபத்தொரு முகங்கள் கொண்டவை இருக்கின்றன. எந்த விதமான ருத்திராட்சைகளை போட்டாலும் நான்குவிதமான புருஷார்த்தங்களையும் அடையலாம். இதற்குச் சான்றாக நடந்த கதையைக் கூறுகிறேன் கேள்.

முன்பு காச்மீர நாட்டினை பத்திரசேனன் என்ற அரசன் ஆண்டுகொண்டிருந்தான். அரசனுக்கு தாரகன் என்ற மகனும், மந்திரி சுதர்மருக்கு சத்குணன் என்ற மகனும் இருந்தார்கள். அவர்கள் சிறுவயதிலிருந்தே நண்பர்களாக இருந்தார்கள். அவர்கள் வேறு எந்த நகைகளையும் போடாமல் ருத்திராட்சைகளை மட்டும் போட்டுக் கொண்டு தினமும் ஈசனை பூஜை செய்து கொண்டிருந்தார்கள். ஒருநாள் அரசவைக்கு பராசர மகரிஷி வந்தார். அவரை மன்னர் துதித்து, பூஜை செய்து தகுந்த ஆசனத்தில் அமரச் செய்து "அந்த இரு குழந்தைகள் ருத்திராட்சங்களை அணியும் விசித்திரமான போக்குக்கு காரணமென்ன கூறுங்கள்" என்று வேண்டினார். அதற்குப் பராசரர் "இப்படிச் செய்வதற்குண்டான விஷயத்தை கூறுகிறேன்.

முன்பு நந்தி கிராமத்தில் மிக அழகான, செல்வமிகுந்த, வாலிபத்திலிருக்கும் 'மகாநந்த' என்ற வேசி (விலைமாது) இருந்தாள். அவள் நல்ல குணம் கொண்டவள். வேசியானாலும் தன்னிச்சையாக வாழாமல், எல்லா தர்மங்களையும் தெரிந்து கொண்டு சாதுக்களையும், தெய்வத்தையும் பூஜை செய்து நல்லவள் என்ற புகழுடன் வாழ்ந்து வந்தாள். அவள் தன் வீட்டிற்கு எதிரில் ஒரு மண்டபத்தை கட்டி அதில் தினமும் நன்றாக அலங்கரித்துக் கொண்டு தன் தோழிகளுடன் நாட்டியம் செய்வாள். அவள் அங்கே ஒரு கோழியையும், குரங்கையும் வைத்து வளர்க்கலானாள்.



வினோதத்திற்காக அவள் அவைகளுக்கு ருத்திராட்சைகளை போட்டு வைத்தாள்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் ஒரு பெறும் சிவபக்தனான ஓர் வணிகச் செட்டியார் விபூதி பூசிக் கொண்டு ருத்திராட்சைகளை அணிந்து, ரத்தின கங்கணம் அணிந்து கையில் திவ்வியமான சூரிய ஒளியைக் கொண்ட ரத்தின சிவலிங்கத்தை ஏந்தி அவ்வழியாகச் சென்று கொண்டிருந்தார். அதைப்பார்த்த அவள் அந்த லிங்கத்தை பெற வேண்டுமென்ற ஆசையுடன் தன் தோழியிடம் அவரை தன் வீட்டிற்கு அழைத்துவர செய்து தன் விருப்பத்தை அவரிடம் கூறி, "அதை விற்றால் தான் வாங்குவேன் என்றும் இல்லை என்றால் மூன்று நாட்கள் பதிவிரதா தர்மத்துடன் அவருடன் இருந்து அவருக்கு சகல சுகத்தையும் தருவேன். பிறகு அதை கொடுக்க வேண்டுமென்று" கூறினாள். அதைக்கேட்ட அந்த செட்டியார் சிரித்து, "வேசியான உனக்கு பதிவிரதா தர்மத்தை எப்படி கடைப்பிடிக்க முடியும். மேலும் வேசியான நீ சொன்ன வார்த்தையை எப்படி காப்பாற்றுவாய்! ஆகையால் உன்னை, என்னால் நம்பமுடியாது" என்றார். அவள் நான் நிச்சயமாக மூன்று நாட்கள் உங்கள் மனைவி போல் இருந்து பதிவிரதா தர்மத்தைக் கடைபிடித்து சகல சுகங்களையும் போகங்களையும் தருவேன். இது உறுதி. அப்படிச் செய்தால் அந்தச் சிவலிங்கத்தை எனக்குக் கொடுங்கள். இல்லையெனில் கொடுக்காமல் போகலாம்" என்று சொல்லி அந்த சிவலிங்கத்தின் மேல் கையை வைத்து சூரிய, சந்திரர்கள் சாட்சியாக பிரமாணம் செய்தாள். அவளின் பேச்சை நம்பி அவளுடன் இருக்கச் சம்மதித்து அவளிடம் "இந்த சிவலிங்கம் மிக சக்தி வாய்ந்தது. ஆகையால் இதைப் படுக்கை அறையில் வைக்கக்கூடாது. வேறு எங்காவது புனிதமான இடத்தில் பத்திரமாக வைக்க வேண்டும், அதுவுமில்லாமல் இந்த மூன்று நாட்களில் இதற்கு எந்த தீங்கும் நடக்கக்கூடாது. அப்படி நடந்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன் என்று கூறி லிங்கத்தை அவளிடம் கொடுத்தார். அவள் அதை தன் நாட்டிய மண்டபத்தில் பத்திரமாக

வைத்து அவருடன் தன் படுக்கை அறைக்குச் சென்றுவிட்டாள்.

அவர்கள் அப்படி படுக்கை அறைக்கு சென்ற பிறகு விந்தையாக அன்று இரவு அந்த நாட்டிய மண்டபம் எரிந்து அதிலிருந்த குரங்கு, கோழி, ரத்தின சிவலிங்கமும் எரிந்துவிட்டன. இதைப் பார்த்த செட்டியார் தன் சிவலிங்கம் எரிந்துவிட்டது. ஆகையால் நான் இங்கு தீயை மூட்டி அதில் விழுந்து தற்கொலை செய்து கொள்வேன் என்று சொல்லி அங்கிருந்த பாதி எரிந்த கட்டைகளை தீ மூட்டி அதில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். அதைப் பார்த்த அந்த வேசி நான் இவருடன் மூன்று நாட்கள் இவர் மனைவியாக இருந்து பதிவிரதா தர்மத்தைக் கடைபிடிப்பேன் என்று பிரமாணம் செய்தேன். ஆகையால் நானும் இந்தத் தீயில் விழுந்து உயிர் விடுவேன் என்று கூறி தீயில் விழுவதற்கு முற்பட்டாள். இதைப் பார்த்த அவளின் உறவுக்காரர்கள் அவளிடம் "நாம் வேசியாக இருந்து தினமும் பலபேருடன் கூடி அவர்களுக்கு ரதிபோகத்தை கொடுப்போம். ஆகையால் நமக்கு யார்தான் கணவர் ஆவார். நீ இப்படி உடன்கட்டை ஏறுவது பைத்தியக்காரத்தனமாகும்" என்று கூறினார்கள். அதைக் கேட்ட அவள் "நான் சூரிய, சந்திரர்கள் சாட்சியாக சிவலிங்கத்தின் மேல் பதிவிரதா தர்மத்தை கடைபிடித்து மூன்று நாட்கள் அவர் மனைவியாக வாழ்வேன் என்று பிரமாணம் செய்தேன். ஆகையால் இவருக்கு நான் மனைவியாவேன். அப்படி மனைவியான நான் அவர் இறந்துவிட்டால் பதிவிரதா தர்மத்தின் படி அவருடன் உடன்கட்டை ஏறுவதுதான் தர்மம். அப்படிச் செய்யாவிட்டால் என் இருபத்தொரு தலைமுறையினர் பாவத்தைப் பெறுவார்கள். நான் சொன்னபடி என் தர்மத்தை செய்தால் அவர்களெல்லாம் புண்ணியம் பெற்றுவிடுவார்கள்" என்று கூறி அந்த தீயில் விழ முற்பட்டாள். உடனே பரமேசுவரன் அவள் முன் தோன்றி "நான் உன் தர்ம குணத்தை சோதிக்க நினைத்து அந்த செட்டியாராக வந்தேன். நான் உன்னிடம் கொடுத்தது என் ஆத்மலிங்கம் தான். இந்த மண்டபத்திற்கு தீயை மூட்டி உன் பதிவிரதா தர்ம பிரமாணத்தை சோதிக்க வேண்டுமென்று



இப்படிச் செய்தேன். உன் தர்மத்தை நிறைவேற்ற நீ முற்பட்டாய். அதைக் கண்டு நான் சந்தோஷம் அடைந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் அதைத் தருகிறேன்" என்று கூறினார். அதைக் கேட்ட அவள் ஆச்சரியப்பட்டு ஈசனை வணங்கி "பரமேசா எனக்கு இந்த புவியில் எந்த போகமும் வேண்டாம். எனக்கு சம்சார பந்தத்திலிருந்து விடுதலை அளித்து சிவலோக பிராப்தி தாருங்கள்" என்று வேண்டினாள். ஈசன் சந்தோஷமடைந்து அவளை சிவலோகம் அழைத்துச் சென்றார். மன்னா! அன்று அந்த மண்டபத்தில் ருத்திராட்சைகள் அணிந்த அந்த குரங்கு, கோழிதான் இந்த இரு குழந்தைகள். முன் பிறவியில் ருத்திராட்சைகள் அணிந்ததினால் இந்தப் பிறவியில் அவர்களுக்கு இந்த பக்தியும், ஞானமும் பிறந்தது. ஆகையால் ருத்திராட்சைகள் அணிபவர்கள் நற்குணமும், பக்தியும், புண்ணியமும் பெறுவார்கள்" என்று ஸ்ரீகுரு கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 34

ஸ்ரீகுரு அந்தத் தம்பதிகளுக்கு மேலும் நடந்ததைச் சொல்லலானார். அந்த மன்னர் பராசரமுனிவரை வணங்கி "அய்யா ருத்திராட்சைகளின் மகிமை தெரியாமலே அவைகளை இவர்கள் போட்டுக் கொண்டதாலேயே இவ்வளவு புண்ணியம் பெற்று இந்தப் பிறவியில் பக்தி கொண்டவர்களாக, ஞானம் நிறைந்தவர்களாகப் பிறந்தார்கள். இவர்கள் இந்தப் பிறவியில் பக்தியுடன் ருத்திராட்சைகளைப் போட்டுக்கொண்டு தினமும் பூஜைகள் செய்கிறார்களே, இதனால் இவர்களின் வருங்காலம் எப்படி இருக்குமென்று கூறுங்கள்" என்று வேண்டினார்.

இதைக் கேட்ட முனிவர் "மன்னா உன் மகனின் வருங்காலம் பற்றிச் சொன்னால் நீங்கள் வேதனைப் படுவீர்கள், ஆகையால் சொல்ல எனக்குத் தயக்கமாக இருக்கிறது" என்று சொன்னார். மன்னர் வேதனையடைந்து "அய்யா அதைச் சொல்லவில்லை என்றால் மேலும் வேதனை பெறுவோம். தயவு செய்து அது என்னவென்று கூறுங்கள்" என்று வேண்டினார். முனிவர் "மன்னா இவன் அல்பாயுசு கொண்டவன். இன்று முதல் எட்டாவது நாள் இவன் இறந்து விடுவான்." என்று கூறினார், இதைக் கேட்ட மன்னரும், அங்கு கூடியிருந்தவர்களும் துக்கமடைந்து வேதனையுடன் "அய்யா இவன் அந்தக் கண்டத்திலிருந்து மீள தகுந்த நிவாரணம் கூறுங்கள்" என்று வேண்டினார்கள். அதைக் கேட்ட முனிவர் "பயம் வேண்டாம் காலனை வெல்ல ஒரு உபாயம் இருக்கிறது. நாராயணனால் உருவாக்கப்பட்டு பிரம்மாவிற்கு நான்கு வேதங்களையும் கொடுத்தார். அதில் யஜுர் வேதத்தில் ஈசனின் மகிமையை தெரிவிக்கும் ருத்திராத்யாயம் இருக்கிறது. அந்த ருத்திரமந்திரத்தை ஜபிப்பவர்களுக்கு நான்கு விதமான நலன்களும் கிடைக்கும். பிரம்ம தேவன் ருத்திராபிஷேகம் செய்த நீரை அமிருத தீர்த்தமாகச் செய்தார். அந்தத் தீர்த்தத்தை பருகியும். குளித்தவர்களின் எல்லாப் பாவங்களும்



நீங்கிவிடும். முன்பு பிரம்ம தேவர் தன் மார்பிலிருந்து தர்மத்தையும், பின்புறமிருந்து அதர்மத்தையும் உருவாக்கினார். இந்த உலகிலும் மேலுலகிலும் தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்கள் சுகமும், அதர்மத்தை கடைப்பிடிப்பவர்கள் வேதனையும் அனுபவிப்பார்கள். காமம், கோபம், லோபம், மோகம், முதலியவை அதர்மத்திலிருந்து பிறந்தவை.

எந்த இடத்தில் ருத்திர ஜபம் நடக்குமோ அங்கு பாவங்கள் வரமுடியாது. முன்பு ருத்திர ஜபம் செய்து அதன் மகிமையினால் பாவிகள் கூட புண்ணியத்தைப் பெறுகிறார்கள். இதனால் ருத்திர ஜபம் செய்யும் பாவிகள் இறந்தால் எம தூதர்களால் எமலோகத்திற்குக் கொண்டு செல்ல முடியவில்லை. இதைப் பார்த்த எமன் பிரம்மாவிடம் வேதனையுடன் தன் வேலையைச் செய்யமுடியவில்லை என்று விண்ணப்பித்தார். இதைக் கேட்ட பிரம்மா சிறிது யோசனை செய்து "இன்று முதல் எவனொருவன் ஒழுக்கமில்லாமல், பக்தி இல்லாமல், தூங்கிக் கொண்டு, நடந்து கொண்டு, தூய்மை இல்லாமலும், கடும் பாவங்களை செய்து கொண்டு தீய எண்ணத்துடன் இந்த ருத்திர ஜபம் செய்வார்களோ அவர்களின் பாவங்கள் நீங்காமல் மகாபாவிகளாக கருதப்படுவார்கள். ஆகையால் அவர்களை நீங்கள் கொன்று எமபுரிக்கு கொண்டு செல்லலாம். பக்தியுடன், ஒழுக்கத்துடன் எவனொருவன் ருத்திர ஜபம் செய்கிறானோ அவனிடம் உன் தூதர்கள் செல்லக்கூடாது. முற்பிறவியில் பெற்ற பாவங்கள் கூட பக்தியுடன் ருத்திர ஜபமும், அபிஷேகமும் செய்தால் அவை நீங்கி நீண்ட ஆயுள், செல்வம், கல்வி, ஞானம், அறிவு பெறுவார்கள். ருத்திராபிஷேக நீரினால் குளிப்பவர்கள் எல்லாப் பாவங்கள் நீங்கி மேன்மையடைவார்கள். நூறு ருத்திரங்களுடன் ஈசனை அபிஷேகம் செய்பவர்கள் நூறு ஆண்டு வாழ்வார்கள். ஆகையால் எமதர்மராஜா உன் தூதர்களை பக்தியுடன் ருத்திரஜபம் செய்பவர்களிடம் செல்லாமலிருக்கும்படி சொல்" என்றார். இதைக் கேட்ட யமன் பிரம்மாவை வணங்கி "நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்" என்று

சொல்லி சென்றுவிட்டார். ஆகையால் மன்னா நீ பக்தியுடன் ருத்திராட்சைகளை போட்டுக் கொண்டு நூறு பிராமணர்களைக் கொண்டு ஏழு நாட்கள் இரவும் பகலுமாக பத்தாயிரம் ருத்திர மந்திர கானம் செய்துகொண்டு விடாமல் ஈசனுக்கு அபிஷேகம் செய்யுங்கள். அதனால் இவன் இந்தக் கண்டத்திலிருந்து தப்பித்து நீண்ட ஆயுள் பெற்று தர்மத்தை கடைப்பிடித்து நன்மார்க்கத்தில் வாழ்வான் என்று கூறினார்.

மன்னரும் பராசரர் சொன்னதுபோல் நூறு பிராமணர்களை வரவழைத்து பராசரரை முதல்வராக இருக்கச் செய்து ருத்திரகானம், அபிஷேகம் ஏழு நாட்கள் செய்து அந்த அபிஷேக நீரினால் அந்தப் பாலகனை நீராடச் செய்தார்கள். எட்டாவது நாள் அந்தப் பாலகன் மயங்கி விழுந்தான். அப்பொழுது பராசர முனிவர் ருத்திராபிஷேக தீர்த்தத்தை எடுத்து அவனின் மேல் தூவினார். உடனே அவன் எழுந்து உட்கார்ந்தான். அப்பொழுது பராசரர் "உன் பிள்ளையின் உயிரைப் பறிக்க எம தூதர்கள் வந்தார்கள். அவர்களை சிவ தூதர்கள் துரத்திவிட்டு அவன் உயிரை காப்பாற்றினார்கள்." என்று கூறினார். மன்னர் மிக சந்தோஷமடைந்து பராசர முனிவரை கௌரவித்து பூஜை செய்து பிராமணர்களுக்கு பரிசுகளை வழங்கி ஊரில் பெரிய விழா கொண்டாடினார். அந்தச்சமயத்தில் நாரத மகா முனி அங்கு வந்தார். மன்னர் எதிர்சென்று சகல மரியாதைகளுடன் அவரை தன் அரசவைக்கு அழைத்து வந்து அவரை வணங்கி "அய்யா நீங்கள் மூன்று உலகங்களிலும் சுற்றுபவர். அங்கே நடந்த விஷேசம் எதாவது இருந்தால் கூறுங்கள்" என்று வேண்டினார்.

நாரதர் "மன்னா கைலாயத்தில் நடந்த அபூர்வத்தை கூறுகிறேன். சிவதூதர்களால் துரத்தப்பட்ட எமதூதர்கள் எமனுடன் கைலாயத்திற்கு வந்து ஈசனிடம் மன்னன் மகனின் உயிரை கொண்டுவராமல் உங்கள் தூதர்கள் தடுத்தார்கள். அப்படிச் செய்தால் எங்களின் கடமைகளை நாங்கள் எப்படிச் செய்ய முடியும் என்று வேண்டினார். அதற்கு ஈசன் மன்னன் மகனின் ஆயுள் காலம்



எவ்வளவு என்று சித்திரகுப்தனைப் பார்க்கச் சொன்னார். சித்திரகுப்தன் இந்தப் பாலகனுக்கு ஆயுள் பன்னிரண்டு ஆண்டுகள்தான். அந்த கண்டம் தப்பிவிட்டால் நீண்ட நாள் வாழ்வான் என்று இருக்கிறது என்று கூறினார். எமன் அப்பொழுது "ஆயுள் முடியும் நேரத்தில் அவர்கள் செய்த ருத்திர ஜபத்தினாலும் அபிஷேகத்தினாலும் அந்தக் கண்டம் நீங்கிவிட்டது. அதைத் தெரியாமல் என் தூதர்கள் சென்றார்கள். எங்களை மன்னியுங்கள்" என்று வேண்டி ஈசனை வணங்கி சென்றுவிட்டார்கள். ஸ்ரீகுருவுக்கு ருத்திராபிஷேகம் செய்பவர்களிடம் மிக்க அபிமானம். ஆகையால் நாமதாரகா நீயும், ஸ்ரீகுருவின் பக்தர்களும் எப்பொழுதும் ருத்திராபிஷேகத்துடன் ஸ்ரீகுருவை பூஜை செய்து நன்மை அடையுங்கள் என்று சித்தமுனி கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 35

சித்தமுனி அதற்கு பின் நடந்ததை சொல்லலானார். சாவித்திரி ஸ்ரீகுருவின் பாதங்களைத் தொட்டு வணங்கி "சுவாமி நான் நற்கதி பெற ஒரு மந்திரத்தைச் சொல்லுங்கள்" என்று வேண்டினாள். ஸ்ரீகுரு "அம்மா பெண்களுக்கு கணவனை சேவிப்பதைவிட நற்கதிக்கு வேறு ஏதும் தேவை இல்லை. மேலும் பெண்களுக்கு சொன்ன மந்திரம் வீணாகிவிடும். இதற்குச் சான்றாக முன்பு நடந்ததைக் கூறுகிறேன் கேள். முன்பு தேவர்களுக்கும் அரக்கர்களுக்கும் போர் நடந்தது. அந்த போரில் இறந்த அரக்கர்களை அவர்களின் குருவான சுக்கிராச்சார்யார் ம்ருத சஞ்சீவினி மந்திரத்தால் பிழைக்கச் செய்து போருக்கு அனுப்பி வந்தார். இதைப் பார்த்த இந்திரன் ஈசனிடம் அரக்கர்கள் சுக்கிரனால் உயிரைப் பெற்று போரிடுவதினால் நேரும் தீங்கைச் சொன்னார். ஈசன் கோபம் கொண்டு நந்தியை அனுப்பி சுக்கிரனை பிடித்து வரச்சொல்ல நந்தியும் தியானத்திலிருக்கும் அவரைப் பிடித்து வந்து ஈசனிடம் ஒப்படைத்தார். ஈசன் அவரை விழுங்கி தன் வயிற்றில் வைத்துக் கொண்டார். ஆனால் சுக்கிரன் மந்திர சக்தியால் மரணமடையாமல் ஈசன் ஏமாந்திருந்த நேரத்தில் அவரின் சிறுநீரில் கலந்து வெளியே வந்து உயிரைப் பெற்று மீண்டும் அரக்கர்களை ம்ருத சஞ்சீவினி மந்திரத்தால் பிழைக்கச் செய்து கொண்டிருந்தார். இதைப் பார்த்த இந்திரன் தங்கள் குருவான பிரஹஸ்பதியிடம் சென்று "அரக்கர்கள் மீண்டும் உயிரைப் பெற்று போரிடுகிறார்கள். அப்படி நடக்காமல் நீங்கள் ஏதேனும் செய்ய வேண்டும்" என்று வேண்டினார் அப்பொழுது பிரஹஸ்பதி யோசித்து ஓர் மந்திரம் பெண்களுக்கும், மூன்றாவது நபருக்கும் தெரிந்தால் அது செயலிழந்து போய்விடும். ஆகையால் அப்படிச் செய்ய ஏதாவது ஒரு வழியைப் பார்ப்பேன்" என்று கூறி தன் மகனான கசனை அழைத்து "நீ ஒரு மாணவனாக சுக்கிரனிடம் சென்று எப்படியாவது அந்த ம்ருத சஞ்சீவினி மந்திரம் செயலிழக்கச் செய்து வா" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.



கசன் சுக்கிரனிடம் சென்று அவரை சாஸ்டாங்கமாக வணங்கி "அய்யா நான் ஓர் பிராமணப் பாலகன். உங்கள் புகழை கேட்டு உங்களிடம் கல்வி கற்க வந்தேன். தயவு கூர்ந்து என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று வேண்டினான். அதைக் கேட்ட சுக்கிரர் சற்று யோசித்துக் கொண்டிருக்கையில் பக்கத்தில் இருந்த சுக்கிரரின் மகள் தேவயானி கசனின் அழகை பார்த்து மயங்கி காதல் வசப்பட்டு தந்தையிடம் கசனை சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டி சம்மதிக்க வைத்தாள். சில நாட்கள் கடந்த பிறகு அரக்கர்கள் கசன் தேவர்களிடமிருந்து கள்ளத்தனமாக இங்கு வந்திருப்பதை அறிந்து, கசன் சமித்துகளுக்காக காட்டுக்கு சென்ற நேரத்தில் அவனை அங்கு கொன்று காட்டில் மறைத்து விட்டார்கள். மாலை ஆகியும் கசன் வீடு திரும்பாததை பார்த்த தேவயானி தன் தந்தையிடம் அவரை வீட்டுக்கு திரும்பிவர செய்ய சொன்னால். சுக்கிரர் தன் அகக்கண்ணால் அவன் மாண்டதை பார்த்து, ம்ருத சஞ்சீவினி மந்திரத்தால் பிழைக்கச் செய்தான். கசன் உயிருடன் இருப்பதைப் பார்த்த அரக்கர்கள் மீண்டும் அவனை கொன்று எரித்து, சாம்பலை நான்கு பக்கமும் தூவிவிட்டார்கள். மீண்டும் கசன் வீடு திரும்பாததைக் கண்ட தேவயானி தன் தந்தையிடம் முறையிட்டு அவரை வீடு திரும்பச் செய்ய வேண்டும் என்று கேட்டாள். தன் மகளின் மேலிருந்த பாசத்தால் கசன் இறந்து எரிக்கப்பட்டு சாம்பலானதை தெரிந்து கொண்டு அவனை உயிர் பிழைக்கச் செய்தார். இதைப் பார்த்த அரக்கர்கள் இந்த முறை கசனை கொன்று சிறு சாம்பலாக்கி அதனை தண்ணீரில் கலந்து சுக்கிரனை குடிக்கச் செய்தார்கள். மீண்டும் கசன் காணாமல் இருக்க தேவயானி தந்தையிடம் சென்று "கசன் வீடு திரும்பவில்லை என்னவென்று பார்த்துச் சொல்லுங்கள்" என்று கேட்டாள். சுக்கிரன் கசனை தன் அகக்கண்ணால் பார்த்த பொழுது அவன் வெளியில் எங்கும் காணவில்லை. ஆனால் சுக்கிரன் வயிற்றில் சாம்பலாக இருப்பது கண்டு தேவயானியிடம் "அம்மா அவன் என் வயிற்றில் இருக்கிறான். அவனைப் பிழைக்கச் செய்து

வெளியில் கொண்டு வந்தால் நான் மரணமடைந்து விடுவேன். அவனால் உனக்கு என்ன ஆக வேண்டும்'' என்று கேட்டார். தேவயானி 'தந்தையே நான் அவரைக் காதலித்தேன். அவரில்லாமல் நான் வாழ மாட்டேன். ஆகையால் நீங்கள் அவரைப் பிழைக்கச் செய்ய வேண்டும். அதற்காக ம்ருத சஞ்சீவினி மந்திரத்தை எனக்குச் சொல்லுங்கள். கசன் உங்கள் வயிற்றிலிருந்து வெளியே வந்தவுடனே அந்த மந்திரத்தால் உங்களை பிழைக்கச் செய்வேன்' என்று கூறினாள். இதைக் கேட்ட சுக்கிரர் அம்மா மந்திரத்தை பெண்களுக்குச் சொன்னாலும், வேறொருவர் கேட்டாலும் அந்த மந்திரம் சக்தியில்லாமல் செயலிழந்து போய்விடும். இதனால் அரக்கர்களுக்கு பேராபத்து வந்து தேவர்களுடனான போரில் தோற்று மாண்டு விடுவார்கள். ஆகையால் என் பேச்சை கேட்டு இந்த கோரிக்கையை விட்டுவிடு" என்று சொன்னார். தேவயானி சுக்கிரனிடம் 'நீங்களும் உங்கள் மந்திரமும் நலமாக இருக்கட்டும். நான் இந்த வேதனையுடன் உயிரை விடுவேன்' என்று சொன்னாள். தன் மகள் வேதனைப்படுவது பார்த்த சுக்கிராசாரியார் தன் வயிற்றிலிருக்கும் கசனை மந்திரத்தால் பிழைக்க செய்து வயிற்றை கிழித்துக்கொண்டு வெளியே வர செய்து அவர் மரணமடைந்தார். உடனே தேவயானி ம்ருத சஞ்சீவினி மந்திரத்தை மூன்று முறை சொல்லி சுக்கிரனை உயிரைப் பெறச் செய்தாள். மந்திரத்தை பெண் ஒருத்தி சொன்னதாலும், மூன்றாம் மனிதரான தான் கேட்டதாலும் அது செயலற்றுப் போய்விட்டதை கசன் அறிந்தான். உடனே கசன் சுக்கிரனிடம் "அய்யா இனிமேல் நான் இங்கே இருந்தால் இந்த அரக்கர்கள் என்னை உயிருடன் இருக்க விட மாட்டார்கள். ஆகையால் நான் செல்வதற்கு அனுமதி கொடுங்கள் என்று வேண்ட சுக்கிரனும் சரி என்று சொல்லி அவனை புறப்படச் செய்தார்.

அதைப் பார்த்த தேவயானி கசனிடம் "நான் உன்னை என் தந்தைக்கு சீடனாக இருக்கச் செய்தேன். மேலும் உனக்கு மூன்றுமுறை உயிரை பெறச் செய்தேன். ஆகையால் என்னை



மணந்து என் ஆசையை நிறைவேற்று" என்று கேட்டாள். அதற்கு கசன் 'குருவின் மகளானதால் எனக்கு சகோதரி ஆவாய். உயிரைப் பெறச் செய்ததால் தாயானாய். ஆகையால் உன்னை மணப்பது மகாபாவம். என்னைப் போகவிடு" என்று வேண்டினான். தேவயானி மோகத்தால் கோபமடைந்து 'நன்றி மறந்தவனே! என் உதவியால் என் தந்தையிடம் நீ கற்ற வித்தைகளெல்லாம் மறந்து போய்விடும்' என்று சாபம் கொடுத்தாள். கசன் அவளை வெறுத்து, தனக்கு வீணாக சாபம் கொடுத்ததாள் கோபமடைந்து 'உனக்கு பிராமணன் அல்லாதவன் தான் கணவனாக வருவான்' என்று எதிர் சாபம் கொடுத்து அங்கிருந்து தேவலோகத்திற்குச் சென்று விட்டான். இதனால் போரில் அரக்கர்களெல்லாம் மாண்டு விட்டார்கள். இதை அறிந்த யாருமே பெண்களுக்கு மந்திரங்களை சொல்வதில்லை. ஆகையால் சாவித்திரி நீ செய்யக் கூடிய விரதத்தை சொல்கிறேன் கேள்" என்றார் அதற்கு சாவித்திரி "சுவாமீ! நீங்கள் சொல்லும் விரதத்தை உங்கள் ஆணைப் போல் பாவித்து அதை மிக சிரத்தையுடன் செய்வோம். தயவு கூர்ந்து அதைச் சொல்லுங்கள்" என்று வேண்டினாள். ஸ்ரீகுரு "மகளே எல்லோரும் சுலபமாக செய்யக்கூடிய 'திங்கட்கிழமை' விரதம் இருக்கிறது. 'திங்கள்' ஈசனுக்கு பிடித்த ஒன்று ஆகையால் இந்த விரதம் செய்தால் ஈசன் சந்தோஷமடைந்து நாம் கேட்பதெல்லாம் அளிப்பார். முன்பு 'சூத' மகரிஷி ' சௌனகர்க்கும்' மற்ற முனிவர்களுக்கும் இந்த விரதத்தை உபதேசம் செய்தார். திங்கட்கிழமை யன்று இரவு நேரம் மட்டும் சாப்பிட்டுக் கொண்டு இந்திரியங்களை அடக்கிக் கொண்டு பக்தியுடன் ஈசனை துதித்து பூஜை செய்ய வேண்டும். இந்த விரத மகிமையை தெரிவிக்கும் கதையை சொல்கிறேன்.

முன்பு 'சித்திரவர்மன்' என்ற மன்னன் ஆர்யாவர்தத்தை ஆண்டுகொண்டிருந்தார். அவர் மிக தர்மமாகவும், நேர்மையாகவும், மக்களை சந்தோஷமடையச் செய்து ஆண்டுகொண்டிருந்தார். ஆனால் அவருக்கு வெகு நாட்களாகியும் பிள்ளைகள் இல்லை. அவர் ஈசனை பூஜித்து அவரின் கருணையினால் ஒரு பெண் பிள்ளையைப்

பெற்றார். அவளுக்கு 'சீமந்தினி' என்ற பெயர் வைத்தார்கள் ஜோதிடர்கள் அவள் ஜாதகத்தைப் பார்த்து நீண்ட நாட்கள் சுகமாகவும், சுமங்கலியாகவும் வாழ்வாள் என்று சொன்னார்கள். சில நாட்களுக்குப் பிறகு ஒரு ஜோதிடர் அரசவைக்கு வந்தார். அவரிடம் சீமந்தினியின் ஜாதகத்தைக் காண்பித்தார். அதைப் பார்த்த அவர் அவள் பதினான்காம் வயதில் விதவை ஆகிவிடுவாள் என்று சொன்னார். இதைக் கேட்ட மன்னர் மிக வேதனைப்பட்டார். சீமந்தினியும் தனக்கு நேரப்போகும் இந்த தீங்குக்கு வேதனை அடைந்த நேரத்தில் அரசவைக்கு "யாக்ஞ்வல்கர்" என்ற முனிவர் மனைவி மைத்ரேயியுடன் வந்தார். இதை அறிந்த சீமந்தினி மைத்ரேயியிடம் சென்று பாதங்களைத் தொட்டு வணங்கி 'அம்மா என் துர்கதிக்கு நிவாரணம் கூறி நான் தீர்க்க சுமங்கலியாக வாழ வழி கூறுங்கள்' என்று மன்றாடினாள். அதற்கு மைத்ரேயி பெண்கள் சுமங்கலியாக வாழ 'திங்கட்கிழமை' விரதம் தான் சிறந்தது.

நீ மனதில் பக்தியுடன் திங்கட்கிழமையன்று பொழுதுவிடியும் முன்பே எழுந்து நீராடி உண்ணாமலிருந்து சிவன் பார்வதியரை பூஜை செய். சிவ பூஜையினால் வரும் யோகங்களைக் கூறுகிறேன். அபிஷேகத்தால் பாவங்கள் தீர்ந்துவிடும். பீடத்தை ஏற்படுத்தி பூஜை செய்தால் சாம்ராஜ்யங்கள் ஏற்படும். சந்தனம், அட்சதைகளால் பூஜை செய்தால் சுகமும், சௌபாக்கியமும் கிடைக்கும். தூபத்தினால் அழகும், தீபத்தினால் ஒளி, நைவேத்தியத்தால் போகங்கள், தாம்பூலத்தால் செல்வமும், வணக்கத்தால் நாலாவித செல்வமும், மந்திரஜபத்தினால் அஷ்ட ஐஸ்வர்யமும், ஹோமத்தால் நிறைய ஆகாரமும், துதிப்பதால் எல்லா வளமும், பிராமணர்களுக்கு அன்னமிடுவதால் சகல தேவதா அருளும் கிடைக்கும். ஆகையால் நீ தவறாமல் 'திங்கட்கிழமை' விரதத்தை பக்தியுடன், சிரத்தையுடன் செய்தால் விரதத்தால் நீண்ட சௌபாக்யமும், தீர்க்க சுமங்கலியமும் கிடைக்கும்" என்று கூறினாள்.

சீமந்தினி அன்று முதல் பக்தியுடன் 'திங்கட்கிழமை' விரதத்தை



செய்யத் தொடங்கினாள். இப்படி இருக்க அவளுக்கு பருவ வயது வந்ததும் அவளை இந்திர சேனா மன்னரின் புதல்வனான 'சந்திராகதனுக்கு' கொடுத்து கல்யாணம் செய்து வைத்தார். சித்திரவர்மர் தனக்கு ஒரே மகளானதால் மாப்பிள்ளையை வீட்டோடு மாப்பிள்ளையாக வைத்துக் கொண்டார். அந்த தம்பதியர் சுகமாகவும், சந்தோஷமாகவும் காலம் கழித்துக் கொண்டிருந்தார்கள். இப்படி இருக்க சீமந்தினிக்கு பதினான்கு வயது வந்த நேரத்தில் ஒரு நாள் சந்திராகதன் காளந்தி எனும் யமுனா நதியில் விளையாட வேண்டுமென்ற ஆசையுடன் நதியில் பரிவாரங்களுடன் சென்று கொண்டிருக்கும் நேரத்தில் படகு கவிழ்ந்து சந்திராகதன் நீரில் மூழ்கி விட்டான். நேரமாகியும் வெளியில் வராததால் நீச்சல் வீரர்கள் நதியில் குதித்து அவரைத் தேடினார்கள். ஆனால் அவர் கிடைக்கவில்லை அவர்கள் சித்தரவர்மரிடம் உங்கள் மாப்பிள்ளை நதியில் விழுந்து மூழ்கி விட்டார். என்று தெரிவித்தார்கள். அதைக் கேட்ட மன்னரும், மகளும், உற்றார் உறவினரும், சோகமடைந்து, வேதனையுடன் நதிக்கரைக்கு வந்தார்கள். பிணமாவது கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நீச்சல் வீரர்கள் நதியில் குதித்து வெகு நேரம் தேடினார்கள். ஆனால் பிணம் கிடைக்கவில்லை. இதைப் பார்த்த சீமந்தினி உயிரை விட முற்பட்டாள். அங்கே கூடியிருந்தவர்கள் 'அம்மா அவர் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்துவிட்டாரா என்பது தெரியாமல் நீ உயிரை விடக் கூடாது. ஆகையால் நீ சிலகாலம் காத்திருக்க வேண்டும்' என்றார்கள். மகன் இறந்த சோகத்தினால் மதி கெட்ட இந்திரசேன தம்பதியரை சிறையில் அடைத்து அவர் நாட்டை அவரின் பங்காளிகள் எடுத்துக் கொண்டார்கள். சித்திரவர்மன் தன் மகளுக்கு ஒரு வருடம் கழித்த பிறகு பூவும், பொட்டும் எடுத்து விடலாமென்று எண்ணி தன் மகளிடம் அம்மா நீ மட்டும் 'திங்கட்கிழமை' விரதத்தை செய்து கொண்டே இரு என்று சொன்னார். அவளும் மிக சிரத்தையுடன் விரதத்தை செய்து கொண்டிருந்தாள்.

தண்ணீரில் மூழ்கிய 'சந்திராகதனை' அங்கிருந்த நாக

கன்னியர்கள் பார்த்து அவரை அமிர்தத்தை பருகச் செய்து உயிரை பெறச் செய்து பாதாளத்தில் மிக ஒளியாக ஒளித்துக் கொண்டிருந்த நாக உலகத்துக்கு கூட்டிச் சென்று தங்களின் அரசனான தட்சகனிடம் கொண்டு சென்றார்கள். தட்சகன் அவருக்கு என்ன நடந்தது என்று தெரிந்துக் கொண்டு அவனிடம் "உனக்கு இனிமேல் எந்த தீங்கும் நடக்காது. நீ சுகமாக இங்கே இருக்கலாம் என்று சொன்னார்." அதைக் கேட்ட சந்திராகதன் "அய்யா நான் இறந்து விட்டேன் என்று நினைத்து என் மனைவி உயிரை விட நேரும். என் பெற்றோர்கள் என்ன ஆனார்களென்று தெரியவில்லை. என் மனைவி ஈசனை வேண்டி திங்கட்கிழமை விரதத்தை செய்து வந்தாள். ஆனாலும் அவளுக்கு விதவையாக நேரிட்டது, ஆகையால் நான் வெகு சீக்கிரமே என் மனைவி, பெற்றோரைப் பார்க்க செல்ல வேண்டும். தயவு செய்து என்னை அனுப்பிவிடுங்கள்" என்று வேண்டினான். அதற்கு தட்சகன் "எங்கள் தெய்வமான ஈசனை பூஜிப்பதால் நீ உயிரை பெற முடிந்தது" என்று கூறி ஒரு பாத்திரத்தில் அமிர்தத்தை கொடுத்து மனவேகத்தில் செல்லக்கூடிய குதிரையை கொடுத்து 'உனக்கு எந்த ஆபத்து நேரிட்டாலும் என்னை வேண்டினால் உடனே வந்து உன்னை காப்பாற்றுவேன்" என்று சொல்லி உயர்ந்த பரிசுகளைக் கொடுத்து அனுப்பி வைத்தார். சந்திராகதன் அந்த குதிரையின் மேலிருந்து ஒரு நொடியில் முன்பு நதியில் எங்கே மூழ்கினானோ அந்த இடத்திலேயே மேலே வந்து நதிக்கரையை அடைந்தான். அதே நேரத்தில் சீமந்தினியும் திங்கட்கிழமை விரதத்திற்காக நீராட நதிக்கரைக்கு வந்தாள். அங்கே கதிரவன் போல் ஒளிந்து கொண்டிருக்கும் சந்திராகதனைப் பார்த்து இவரை முன்பு எங்கோ பார்த்தது போல் தெரிகிறது யாராக இருக்கும். ஒரு வேளை தன் கணவராக இருக்குமோ என்று நினைத்து பார்த்துக் கொண்டிருந்தாள். சந்திராகதனும் மாங்கல்யம், நகைகளும் இல்லாமலும், சோக வடிவம் கொண்டிருக்கும் இந்தப் பெண்ணை பார்த்தால் என் மனைவி போல் தெரிகிறது என்று நினைத்து, தட்சகனின் வரத்தினால் மாறுவேடம்



பெற்று அவளருகில் சென்று "நீ யார்? இப்படி சோகமாக ஏன் இருக்கிறாய்? என்று கேட்டான். அதற்கு அவளின் தோழிகள் சந்திராகதன் நதியில் மூழ்கியதை, மற்றும் அவரின் பெற்றோர்களை உறவினர் சிறையில் வைத்ததையும் சொன்னார்கள். இதை கேட்டு மனம் கலங்கி, தன்னை தேற்றிக் கொண்டு சீமந்தினிடம் 'உன் திங்கட்கிழமை' விரதத்தால் உன் கணவர் மூன்று நாட்களில் உன்னை வந்து அடைவார்' என்று சொல்லி முதலில் தன் பெற்றோர்களை காப்பாற்ற சென்று அங்கு அவர்களின் ராஜ்ஜியத்தை ஆக்கிரமித்து கொண்டிருந்தவர்களிடம் "தான் நாக மன்னனான தட்சகனிடம் வரம் பெற்று வந்திருப்பதாகவும், ராஜ்ஜியத்தை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையெனில் பெரும் படையுடன் போரிட்டு உங்களை வென்று ராஜ்ஜியத்தை எடுத்து கொள்வேன்" என்று சொல்லி அனுப்பினார். நதியில் மாண்டதாக நினைத்த சந்திராகதன் உயிருடன் திரும்பி வந்ததையும், அவன் தட்சகனிடம் வரம் பெற்றதையும் தெரிந்துக் கொண்டு பயந்து அரசை அவனிடம் ஒப்படைத்து மன்னிக்க வேண்டுமென்று அவன் காலடியில் விழுந்து வேண்டினார்கள். அவர்களை மன்னித்துவிட்டு பெற்றோர்களிடம் சென்று தான் நாக உலகத்தின் அழகை ரசித்துக் கொண்டு தாமதமானதற்கு மன்னிப்புக்கேட்டு அவர்களுடன் மாளிகைக்கு சென்றார்கள். பெற்றோரும், அவனும் இதையெல்லாம் சீமந்தனியின் திங்கட்கிழமை விரத மகிமையினால் நடந்தது என்று சந்தோஷப்பட்டு அவளை அழைத்து வந்து சந்திராகதனுக்கு பட்டாபிஷேகம் செய்து வைத்தார்கள். சீமந்தினியின் திங்கட்டகிழமை விரதத்தினால் அவன் உயிரை பெற்று பத்தாயிரம் ஆண்டுகள் ராஜ்ஜியபாலனம் செய்து சுகத்துடன் வாழ்ந்தார்கள். ஆகையால் அம்மா நான் உன்னிடத்தில் கொண்ட அன்பினால் உனக்கு அந்த விரதத்தை சொன்னேன். இதை நீ பக்தியுடன், சிரத்தையுடன் செய் உனக்கு பிள்ளைபேரு, சௌபாக்கியம், செல்வம் கிடைத்து தீர்க்க சுமங்கலியாக வாழ்வாய்" என்று ஆசி வழங்கினார்.

இதற்குள் தத்தாத்ரேயரின் பெற்றோர்கள் தம் மகனை பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் அங்கே வந்து, அங்கே நடந்ததையெல்லாம் தெரிந்துக் கொண்டு ஸ்ரீகுருவின் ஆசியினால் தம் பிள்ளை சுகமாக இருக்கிறார் என்று ஆனந்தபட்டு எல்லோரும் ஸ்ரீகுருவை தரிசனம் செய்து ஆசியை பெற்று தம் ஊருக்கு சென்று விட்டார்கள்.

இறந்த ஒருவரை உயிர் பெற செய்து ஒரு விதவைக்கு சுமங்கலியத்தை அளித்தார் என்ற விந்தை நாலாபக்கமும் பரவியது.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 36

நாமதாரகன் சித்தயோகியை வணங்கி 'அய்யா அறியாமை என்ற இருளில் இருந்த என்னை அறிவு என்ற விளக்கை ஏற்றி அதனின் ஒளியினால் என் அறியாமை போக்கினீர்கள். மேலும் என்ன நடந்தது என்ற ஆவலை தீர்த்து வையுங்கள்' என்று வேண்டினான். 'மகனே குரு லீலைகளை முழுமையாக சொல்லமுடியாது. அதில் சிலவற்றை கூறுகிறேன் கேள்!

அந்த கானகாபுரத்தில் வைதீக பிராமணர் இருந்தார். அவர் பிச்சையுடன் திருப்தியாக வாழ்ந்துக் கொண்டிருந்தார். அவர் எக்காரணம் கொண்டு பிறர் வீட்டில் சாப்பிடுவதில்லை. ஆனால் அவன் மனைவி அங்கு நடக்கும் பிராமண அன்ன சமாராதனைகளுக்கு சென்று ருசியான சாப்பாட்டை சாப்பிட்டு அவர்கள் கொடுக்கும் வஸ்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. தன் கணவரோ இதற்கு ஒத்துக் கொள்ளாதலால் அவர் மேல் வருத்தம் கொண்டிருந்தாள். ஒரு நாள் ஒரு செல்வந்த பிராமணர் அந்த ஊரில் இருக்கும் பிராமண தம்பதிகள் எல்லோரையும் சமாராதனைக்கு வரவேண்டுமென்று அழைத்தார். ஆனால் இந்த வைதீக பிராமணர் செல்ல விரும்பவில்லை. அவன் மனைவி அவனிடம் நான் மட்டும் செல்கிறேன். அனுமதி கொடுங்கள் என்று கேட்டாள். அவன் 'உனக்கு அப்படி ஒரு ஆசை இருந்தால் நீ போகலாம்' என்று கூறினார். அப்பொழுது அந்த செல்வந்தனிடம் நான் மட்டும் வரலாமா என்று கேட்டாள். அவர் 'அம்மா தம்பதிகளுக்கு சமாராதனை செய்ய நினைத்தேன். ஆகையால் நீ மட்டும் வரமுடியாது' என்று கூறிச் சென்று விட்டான்.

அவள் வேதனையுடன் ஸ்ரீநரசிம்ம சரசுவதியிடம் சென்று 'சுவாமி என் கணவர் இங்கே நடக்க இருக்கும் சமாராதனைக்கு அவர்கள் வந்து கூப்பிட்டாலும் வர மறுத்து விட்டார். எனக்கு அங்கே

சென்று ருசியான சாப்பாட்டை சாப்பிட்டு அவர் கொடுக்கும் வஸ்திரம், தனம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. நீங்கள் என் கணவரை வரவழைத்து என்னுடன் அந்த சமாராதனைக்கு வரச் செய்யுங்கள்' என்று வேண்டினாள். அதற்கு சுவாமி சிரித்து, அவள் கணவனை வரவழைத்து "என் ஆணைப்படி நீ இன்று உன் மனைவியுடன் சமாராதனைக்குச் சென்று வா. மனைவியின் கோரிக்கைகளை தீர்த்து வைப்பது கணவனின் கடமை". என்றார். அதற்கு அவன் 'அய்யா வேறொருவர் வீட்டிலோ, சமாராதனைகள் செய்யுமிடத்திலோ சாப்பிட விருப்பமில்லை. ஆனால் குருவின் ஆணையை மீறுவது தவறு என்றதனால் உங்களின் ஆணைப்படி செல்கிறேன்' என்று கூறி தன் மனைவியுடன் சமாராதனை நடக்கும் இடத்துக்கு சென்றார்கள். அங்கே எல்லோருடனும் இவர்களும் உட்கார்ந்தார்கள். எல்லோருக்கும் சாப்பாடு பரிமாறப்பட்டது. அந்த நேரத்தில் இவள் கண்களுக்கு அங்கே நாய், பன்றி வந்து இலையில் இருக்கும் சாப்பாட்டை சாப்பிடுவது போல் தென்பட்டது. அவள் இது உண்மையா என்று உற்றுப் பார்க்கையில் ஒரு நாய் பந்தியின் ஓரமாக வெளியே சென்று கொண்டிருந்தது தென்பட்டது. உடனே அவள் 'நாய், பன்றிகள் வந்து சாப்பிடுகின்றன. இது எங்களை அவமானம் செய்தது போல் ஆகிறது' என்று கூச்சலிட்டாள். இதைப் பார்த்த அவள் கணவன் எழுந்து நான் வர மறுத்தாலும் இங்கே கூட்டிவந்து அசிங்கபடுத்திவிட்டாய் என்று கூறி அவளுடன் நரசிம்ம சரசுவதியிடம் சென்றான். அவர்களை பார்த்து சுவாமி "என்னம்மா விருந்து சாப்பாடு நன்றாக இருந்ததா" என்று கேட்டார். அவள் சுவாமியை பார்த்து 'சுவாமி என்னை மன்னித்து விடுங்கள். நான் அவமானப்பட்டது இல்லாமலும் என் கணவரையும் அவமானப்படச் செய்தேன்!' என்றாள். அதற்கு சுவாமி "அய்யா உன் மனைவி தன் தவறை தெரிந்து கொண்டு வருந்தினாள். ஆகையால் அவளை மன்னித்துவிடு. ஆனால் எப்பொழுதாவது யாருக்காவது தைவ, பித்ரு காரியங்களின் விருந்தினர் கிடைக்காமல்



இருக்கும் பொழுது அங்கே விருந்திற்குச் சென்று சாப்பிடுவது தவறில்லை. மேலும் அது புண்ணிய செயலாகும்" என்று கூறினார். அப்பொழுது அந்த பிராமணர் 'சுவாமி எப்படியான இடத்தில் சாப்பிடலாம், எந்த இடத்தில் சாப்பிடக்கூடாது என்பதைத் தெரிவியுங்கள்' என்று வேண்டினான்.

"உத்தம பிராமணரே குரு வீட்டிலும், தாய்மாமன், பெண் கொடுத்த மாமன், சாதுக்கள், சகோதரர்கள் வைக்கும் சாப்பாட்டைச் சாப்பிடலாம். பெற்றோர்களைக் கொண்டு சேவை செய்து கொள்பவன், மனைவி, மக்களை துன்புறுத்துபவன், புகழுக்காக தானம் செய்பவன், போக்கிரி, எப்பொழுதும் சண்டையிடுபவன், வைசியதேவம் செய்யாதவன், பணத்திற்காக அருகதை இல்லாதவர்களுக்கு மந்திர உபதேசம் செய்பவன், கோபம் கொள்பவன், மனைவியை விட்டவன், துஷ்டன், பெண்களுடன் திரிகிறவன், திருடன், கஞ்சன், ஆசாரத்தைக் கடைபிடிக்காதவன், பணம் பெற்று டம்பத்திற்காக ஜபங்களை செய்பவன், செய்நன்றி மறப்பவன், ஒருதலை பட்சமாக அநியாயத்தைக் கூறுபவன், தன் தர்மத்தை விட்டு வேறு தர்மத்தைக் கடைப்பிடிப்பவன், பிராமணர்களைக், குருக்களை, சாதுக்களை, தன் வீட்டு உணவை நிந்திப்பவன், தன் குல தேவதையை விட்டவன், பேராசை கொண்டவன் இப்படிப்பட்டவர்களின் சாப்பாட்டை சாப்பிடக்கூடாது.

இப்படிப்பட்ட இடங்களில் சாப்பிட்டால் அடுத்த பிறவியில் ஊனமுறுதல், சிறிய ஆயுள், புத்தி சரியில்லாமலும் பிறப்பார்கள். வெறும் அத்வைதம் சொல்லி தெய்வ பூஜை செய்யாதவன், வயிற்று பிழைப்பிற்காக பொய்யான வேடம் போடுபவன் போடும் உணவினால் அடுத்த பிறவியில் குருடு, காது கேளாமல் பிறப்பார்கள். எப்பொழுதும் மற்றவர்களின் வீட்டில் சும்மா சாப்பிடுபவனுக்கு அவர்களின் பாவம் இவனுக்கு வரும். வேலைக்காரன் மூலமாக அழைக்கப்பட்ட பிராமணர் வீட்டில் சாப்பிடக்கூடாது. பசு, தங்கம், நிலம் தானமாக பெறுவது பெரும் தவறில்லை. ஆனால், கிரகணம்,தீட்டு

காலங்களில் அன்னதானத்தை பெறுவது பெரும் பாவம். பிள்ளைகள் பிறக்காதவரை மகளின் வீட்டிலும் சாப்பிடக்கூடாது. தன் ஆசாரத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கு எந்த தீங்கும் வராது" என்றார். அப்பொழுது அந்த பிராமணர் சுவாமியிடம் 'சுவாமி, ஆசாரங்களை பற்றி தெரிவியுங்கள்' என்று வேண்டினான். முன்பு 'நைமிச' அரண்யத்தில் பராசர மகரிசியை முனிவர்கள் சதாசாரம், நாம் செய்யவேண்டிய தர்மத்தைப் பற்றித் தெரிவிக்க வேண்டும் என்று வேண்டினார்கள். அதற்கு பராசரர் "முனிவர்களே, விடியற்காலையில் பிராஹ்மி முகூர்த்தத்தில் எழுந்து, மும்மூர்த்திகளை, பித்ரு தேவர்களை, ரிஷிகளை முதலில் நினைக்க வேண்டும். பிறகு பசுவை வணங்கி ஆசமனம் செய்து சிறுநீர், மலம் கழிக்க வேண்டும். நின்று சிறுநீர், மலம் கழித்தால் பாவம் வரும். வடமேற்கு திசைக்குச் சென்று தலையில் துண்டை போத்திக் கொண்டு மேலும், கீழும் பார்க்காமல் கழிக்க வேண்டும். கோவில்கள், பவித்ரமான மரங்கள் இருக்கும் இடத்தில் மலம், சிறுநீர் கழிக்கக்கூடாது. வழிகளுக்கு, தண்ணீருக்கு தூரமாகவும், புல் இல்லாத இடத்திலும் கழிக்க வேண்டும். குளித்தல், வாந்தி, சாப்பிடுதல், சுடுகாடுக்குச் சென்ற நேரம் முதலிய நேரங்களில் ஆசமணம் செய்ய வேண்டும். விடியற்காலையில் குளிப்பதினால் தேஜஸ், பலம், ஆயுள் விருத்தி முதலியவை பெறலாம். இப்படி எவரொருவர் நல்ல கர்மாக்களை செய்கிறானோ அவன் இவ்வுலகிலும், மேலுலகிலும் சுகமாக இருப்பான்" என்று கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 37

நாமதாரகா ஸ்ரீகுரு மேலும் பிராமணர்களின் வீட்டில் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களையும், ஆசாரங்களையும் சொல்லலானார். எல்லோரும் வீட்டில் சந்தனம், நெய், மான் தோல் வைத்துக் கொண்டு மூன்று வேளைகளிலும், மான் தோல் மேல் உட்கார்ந்து பூஜை செய்ய வேண்டும். அப்படி முடியாதவர்கள் காலை வேளையிலாவது கண்டிப்பாக பூஜை செய்ய வேண்டும். மனிதனாக பிறப்பதே மிக அரிது. அப்படி பிறந்தும் கடவுள் பூஜை ஒரு வேளையாவது செய்யாவிடில் அவன் நரகம் செல்வான். எல்லாவற்றிலும் குருபூஜை மிகச் சிறந்தது. அதனால் மும்மூர்த்திகள் சந்தோஷமடைவார்கள். ஆனால் கலியுகத்தில் மனிதர்களுக்கு 'குரு' பகவான் என்ற எண்ணம் ஏற்படுவது கடினம். ஆதலால் புத்தி குறைவானவர்களை காக்க பகவான் சாலகிராமம், பாணலிங்க ரூபங்களைக் கொடுத்து அவற்றை பூஜித்தால் எல்லா பாவங்களும் நீங்கிவிடும். பசு, பிராமணர், நெருப்பு, நீர், சூரியன் ஆகியவையும் பகவானைப் போல் பாவித்து பூஜை செய்யலாம். எல்லாவற்றிலும் மனதில் பூஜிப்பது மேலானது. நடுத்தரமானவர்களுக்கு மண்டலத்தின் பூஜையும், கீழ்தரமானவர்களுக்கு மூர்த்தி பூஜையும் நல்லது.

மனையின் மேல் உட்கார்ந்து சிரத்தையுடன் சங்கல்பம் சொல்லி, பிராணாயாமம் செய்து பூஜை செய்யும் பொருட்களை தயாராக வைத்துக் கொண்டு அவைகளின் மேல் நீரை தெளிக்க வேண்டும். பின்பு எதிரில் ஒரு மேடையின் மேல் நீரை தெளிக்க வேண்டும். பின்பு மேடையின் மேல் நம் விருப்ப தேவதையின் விக்கிரகத்தை வைத்து, அதற்கு வலதுபுறம் சங்கு, இடது புறம் மணி வைத்து கடவுள் விக்கிரத்தை சுத்தமான துணியினால் துடைத்து, பால், தயிர், சந்தனம், தேன், நெய் முதலிய பொருட்களுடன் அபிஷேகம் செய்து சந்தனம், குங்குமம் வைத்து விளக்கை ஏற்ற வேண்டும்.

முதலில் விநாயகரை பூஜித்து, குருவை நினைத்து பிறகு, பீடத்தையும், துவாரபாலகர்களையும் பூஜிக்க வேண்டும். பிறகு விருப்ப தேவதையை மனதில் நினைத்து அவரை நம் எதிரிலுள்ள விக்கிரகத்துக்குள் வரவேற்க வேண்டும். அந்தக் கடவுளே நம் எதிரிலிருந்து நம் பூஜையை ஏற்றுக் கொள்வாரென்று நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வெள்ளை நிற பூக்கள் பூஜைக்கு மேலானவை. மஞ்சள், சிகப்பு நிறப் பூக்கள் நடுத்தரமானவை. மற்ற நிற பூக்கள் நல்லதல்ல. எருக்கம் பூ விஷ்ணு பூஜைக்கு உகந்ததல்ல. கணபதியை துளசியுடன், அம்மனை புல்லுடன் பூஜை செய்யக்கூடாது. பகவான் பாதங்களில் பூக்களை வைத்து வலம் வந்து கீழே விழுந்து கும்பிட வேண்டும். பெற்றோர்கள், பெரியோர்கள், பூஜை செய்யக்கூடியவர்களின் பாதங்களை வணங்க வேண்டும். குருவை பார்த்தால் அவரின் வலது பாதத்தை நம் வலது கையாலும், இடது பாதத்தை இடது கையாலும் தொட்டு சாஸ்டாங்கமாக விழுந்து வணங்க வேண்டும். பிறகு குருவின் முழங்காலிலிருந்து பாதங்கள் வரை தடவி விட வேண்டும். தாய், தகப்பன், வளர்ப்பவர், பயத்தை போக்குபவர், உணவு அளிப்பவர் (அன்னதாத), மாற்றான் தாய், புரோகிதர், அண்ணன்மார்கள், பெற்றோர்களின் சகோதரர்கள், ஞானம் மிகுந்த முதியோர்கள் இவர்களெல்லாம் குருவுக்கு சமமானவர்கள். ஆகையால் இவர்களையும் வணங்க வேண்டும். அறிவில்லாதவர்கள், தன்னைவிட வயது குறைந்தவர்கள், குளிப்பவர்கள், பூஜைக்கு வேண்டிய பொருட்களைக் கொண்டு வருபவர்கள், ஹோமம் செய்பவர்கள், பணகர்வம் கொண்டவர்கள், கோபம் கொள்பவர்கள், மூர்க்கர்கள், பிணம் இவர்களை வணங்கக்கூடாது. ஒரு கையினால் வணக்கம் சொல்லக்கூடாது. சம்சாரிகளின் வீடுகளில் அரைக்கும் கல், உலக்கை, கத்தி, இடிக்கும் கட்டை, நீர், நெருப்பு, துடைப்பம் இவைகளை உபயோகிப்பதால் ஏற்படும் பாவத்தை போக்க வைஸ்ய தேவம் செய்ய வேண்டும். வைஸ்யதேவம் என்றால் சமைத்த உணவை தேவதைகளுக்கு,



முன்னோர்களுக்கு, ஐந்து பூதங்களுக்கு, ரிஷிகளுக்கு, விருந்தினருக்கு சமர்ப்பணம் செய்து மீதமுள்ள ஆகாரத்தை யக்ஞசேஷமாக (யக்ஞம் செய்த பிறகு மீதியுள்ளது) நினைத்து உட் கொள்ள வேண்டும். அதிதிகளின் (விருந்தினர்) குலம், கோத்திரம் பார்க்காமல் வந்தவர்கள் கடவுளின் ரூபமாக நினைத்து உணவு இட வேண்டும். அப்படி வந்த அதிதிகளுக்கு அளிக்கும் ஒரு பிடி சாதம் பெரிய மலை போன்றது. அப்படி வந்தவர்களை விட்டு சாப்பிட்டால் அடுத்த பிறவியில் நாய், கழுதையாக பிறப்பான். சாப்பாட்டை பரிமாறும் போது வேறுபாடு செய்தால் அது மகாபாவமாகும். உணவு இடும் இடத்தை தண்ணீரினால் சுத்தம் செய்து கோலங்கள் போட்டு, தேவதைகளை வரவேற்று, இலை போட்டு பரிமாற வேண்டும். முதலில் வலது பக்கம் சித்திரகுப்தனுக்கு பலியாக சிறிது உணவை வைத்து பிறகு சாப்பிட வேண்டும். சாப்பிடுகிற சைதன்யம், சாப்பிடும் உணவு கடவுளின் ரூபமென்ற நினைப்புடன் சாப்பிட வேண்டும். நாய், தீட்டிலிருக்கும் பெண், தர்மத்தை கடைபிடிக்காதவன் இவர்களை பார்த்துக் கொண்டு சாப்பிடக்கூடாது. சாப்பிட்ட பிறகு அகத்திய மகரிஷியை, கும்பகர்ணனை நினைத்தால் ஜீர்ண சக்தி பெருகும். மாலையில் புராணங்கள், நல்லதொரு புத்தகங்களிலிருந்து பெரியோர்களின் சொற்பொழிவு கேட்க வேண்டும். இரவில் சிறிதளவு சாப்பிட்டு சிறிது நேரம் நல்ல புத்தகங்களை படித்து, அன்றைக்கு செய்த நல்ல காரியங்களை கடவுளின் அருளால் நடந்தவை என்று எண்ணி கடவுளை வணங்க வேண்டும். வடக்கு புறம் தலை வைத்து தூங்கக்கூடாது. மீதி திக்குகளில் தலை வைத்து தூங்கலாம். இன்றையிலிருந்து நீ இந்த தர்மங்களை கடைப்பிடித்து வாழ்வாய். அவசர நேரத்தில் பிறரின் வீட்டில் உணவு உட்கொள்ளலாம். உன் ஆசாரத்தை கடைப்பிடி. ஆசாரத்தை கடைப்பிடிப்பவர்களின் இல்லத்தில் தரித்திரம் இருக்காது. அவர்கள் பிள்ளை, பேரன்களுடன் சுகமாக வாழ்வார்கள்" என்று உபதேசம் செய்தார். ஸ்ரீகுரு கூறியதை கேட்ட அந்த பிராமணத் தம்பதியர் ஸ்ரீகுருவை வணங்கி சென்றார்கள்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*

## அத்தியாயம் 38

நாமதாரகன் சித்தமுனியிடம் "அய்யா ஸ்ரீகுருவின் வரலாறு கேட்க கேட்க இன்னமும் கேட்க வேண்டுமென்ற ஆவல் மிகையாக உள்ளது. தயவு கூர்ந்து மேலும் நடந்ததைக் கூறுங்கள்" என்று வேண்டினான். அதற்கு சித்தயோகி "மகனே உன்னை போன்ற குரு பக்தனும், கேட்பவனும் கிடைத்ததினாலே குரு சரித்திரம் மீண்டும் நினைவுக்கு வருகின்றது. ஸ்ரீகுருவின் மகிமையை கேட்டு செல்வந்தர்களான பக்தர்கள் காணகாபரம் வந்து குருவை தரிசித்து அவருக்கு பிச்சை அளித்து அந்த ஊரிலிருக்கும் பிராமணர்களுக்கு அன்னதானம் செய்து வைத்தார்கள். ஒரு நாள் காஸ்பஸ கோத்திரமுடைய பாஸ்கர சர்மா என்ற ஏழைப் பிராமணர் தன்னுடன் மூன்று பேருக்கு வழங்கக்கூடிய அளவு உணவு பொருட்களைக் கொண்டு அன்னதானம் செய்ய அங்கு வந்து ஸ்ரீகுருவை பார்த்து வணங்கினார். ஆனால் அன்று வேறொருவரின் அன்னதானம் நடந்ததினால் அன்று இவரும் அங்கு சென்று சாப்பிட்டார். இப்படி தினமும் நடக்கும் அன்னதானத்தில் சாப்பிட்டுக் கொண்டு மூன்று மாத காலம் கடந்தது.

அந்த மடத்திலிருக்கும் மற்றவர்கள் இவர் அன்னதானம் செய்வதற்காக கொண்டு வந்த பொருட்களைப் பார்த்து அவரிடம் "ஏனய்யா, பேருக்கு நீ அன்னதானம் செய்வது போல் வந்து இங்கே நன்றாக சாப்பிட்டு உடலை பெருக்கி கொண்டாய். நீ கொண்டு வந்த அரிசி, பருப்பு மற்றவை ஸ்ரீகுருவுக்கே போதாது. மற்றவர்களுக்கு எல்லாம் எப்படி அன்னதானம் செய்வாய்?" என்று ஏளனம் செய்து கொண்டிருந்தார்கள். இதைக் கேட்ட பாஸ்கர சர்மா தன்னால் முடிந்ததைக் கொண்டுவந்தேன். என் ஏழைத்தனத்தினால் எல்லோருக்கும் அன்னதானம் செய்ய முடியவில்லையே என்று வருந்திக் கொண்டிருந்தார். சகலமும் அறிந்த ஸ்ரீகுரு பாஸ்கர சர்மா படும் வேதனையை தெரிந்து கொண்டு பாஸ்கர சர்மாவை அழைத்து



"அப்பனே நாளை நீ இங்கு சமைத்து எங்களுக்கு பிச்சை அளித்து, இந்த ஊரிலுள்ள எல்லோருக்கும் அன்னதானம் செய்" என்று கட்டளை இட்டார். சுவாமி சொன்னதை ஏற்றுக் கொண்டு மறுநாள் விடியற்காலையில் எழுந்து நீராடி அனுட்டானங்களை முடித்துக் கொண்டு தயிர், நெய் வாங்கிக் கொண்டு சமையல் செய்ய ஆரம்பித்தார்.

அந்த நேரத்தில் வேறொரு பிராமணர் வந்து "சுவாமி இன்று என் வீட்டில் நீங்களும் உங்கள் சீடர்களும் பிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று வேண்டினான். இதற்கு சுவாமி "இன்று பாஸ்கர சர்மாவின் பிச்சைதான் பெறுவோம். நீங்கள் நாளை வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார். அதற்கு அவரும், அங்கே உள்ளவர்களும் பாஸ்கர சர்மா செய்யும் சாப்பாடு ஒவ்வொருவருக்கு ஒரு சோறுதான் வருமே. நாமெல்லாம் இன்று அவரவர் வீட்டில்தான் சாப்பிட வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள். இதை அறிந்த ஸ்ரீகுரு "நீங்கள் எல்லோரும் இன்று சாப்பாட்டிற்காக வேறெங்கும் செல்ல வேண்டாம். நீங்கள் உங்கள் மனைவி, மக்கள், உங்கள் குடும்பத்தார், உறவினர்கள், நண்பர்களுடன் வந்து இந்த மடத்திலே சாப்பிட வேண்டும். ஆகையால் நீங்கள் எல்லோரும் நீராடி வாருங்கள்" என்று சொன்னார். அவர்கள் ஒருவரின் முகம் ஒருவர் பார்த்துக் கொண்டு, சிரித்து இவன் கொண்டு வந்தது ஒரு படி அரிசி, அதற்கு தகுந்த பருப்பு வகையராக்கள். இதை எத்தனை பேர் சாப்பிட முடியும். இன்று நமக்கு பட்டினிதான் என்று சொல்லிக் கொண்டு குளிக்கச் சென்றுவிட்டார்கள். குருமூர்த்தி பாஸ்கர சர்மாவை கூப்பிட்டு "இன்று நிறைய பிராமணர்கள் வருவார்கள். சீக்கிரமாக உணவை தயார் செய்" என்றார். பாஸ்கர சர்மா உணவு தயாராகிவிட்டது என்று பதிலளித்தார். "அப்படி என்றால் நீ நதிக்கரைக்கு சென்று பிராமணர்களிடம் உணவு தயாராகிவிட்டது. குருவின் ஆணைப்படி நீங்கள் எல்லோரும் உணவு உட்கொள்ள வாருங்கள் என்று அழைத்து வா" என்று கூறினார். பாஸ்கர சர்மா குரு கூறியது போல்

நதிக்கரைக்கு சென்று அங்குள்ள பிராமணர்களை அழைத்தார். அதற்கு அவர்கள் சிரித்து "ஏன்னய்யா இன்று நீ சாப்பாடு போட்டது மாதிரி நாங்கள் சாப்பிட்டது போல் வைத்துக் கொள்வோம். நீர் கொண்டு வந்த ஒரு படி அரிசி எத்தனை பேருக்கு வரும். ஆகையால் நாங்கள் எங்கள் வீடுகளுக்கு போய் சாப்பிடுவோம்" என்று ஏளனம் செய்தார்கள். பாஸ்கரசர்மா குருவிடம் 'அவர்கள் வர மறுத்துவிட்டார்கள் நீங்களாவது பிச்சை செய்ய வாருங்கள்' என்று வேண்டினார். ஸ்ரீகுரு "நாங்கள் பிராமணர்கள் எல்லோருடன் தான் பிச்சை செய்வோம். நான் தனியாக பிச்சை செய்ய மாட்டேன்" என்றார். குருவின் வாக்கு பொய்யாகாது என்று எண்ணி "சுவாமி நான் என்ன செய்வது நான் அழைத்தும் அவர்கள் வரவில்லை" என்றார். சுவாமி தன் சீடன் ஒருவனை "நதிக்கரைக்குச் சென்று பிராமணர்களையெல்லாம் உடனே மடத்தில் சாப்பிட அழைத்துவா" என்றார். அவன் நதிக்கரைக்கு சென்று குருமூர்த்தியின் ஆணையை அவர்களுக்குச் சொல்லி அவர்களை மடத்துக்கு அழைத்து வந்தார். அப்பொழுது குரு அவர்கள் பிராமணரிடம் இவர்களையெல்லாம் குடும்பத்தாருடன் வந்து சாப்பிடவேண்டுமென்று அழைக்கச் சொன்னதற்கு அவர் அப்படியே அழைத்தார். அங்கு வந்தவர்கள் எல்லோரும் நீ செய்த உணவு ஒவ்வொருவருக்கு ஒரு சாதம் கூட வராது. உனக்கு எங்களை இப்படி அழைக்க வெட்கமாக இல்லையா என்று ஏளனம் செய்தார்கள். அங்குள்ள வயதானவர்கள் மட்டும் அவர் என்ன செய்வார். ஸ்ரீகுருவின் கட்டளைப்படி செய்கிறார். இதில் அவர் தவறேதுமில்லை என்றார்கள்.

பாஸ்கர சர்மா இலைகளை போட்டு எல்லோரையும் உட்கார சொல்லி ஸ்ரீகுருவுக்கு ஆறுவிதமான பூஜைகளை செய்து பாதங்களை தொட்டு வணங்கி பிச்சைக்கு அழைத்தார். அப்பொழுது ஸ்ரீகுரு அவனிடம் தன் மேலிருந்த வஸ்தரத்தை (துண்டு) கொடுத்து அதை அந்த உணவு பாத்திரங்கள் மேல் மூடி வைத்து துணியை எடுக்காமல் உணவை பரிமாற சொல்லி கமன்டலத்திலிருந்த நீரை எடுத்து



தெளித்தார். பிறகு பாஸ்கரசர்மாவும் இன்னும் சிலர் தட்டுகள் எடுத்து துணியின் கீழிருந்து சாப்பாட்டையும் மற்றவையும் எடுத்து எல்லோருக்கும் பரிமாறினார்கள். முதலில் ஸ்ரீகுரு ஆபோசனம் செய்து உணவு சாப்பிட ஆரம்பித்தார். பாஸ்கரசர்மா ஒவ்வொருவரிடம் சென்று என்ன வேண்டுமோ கேட்டு கேட்டு பரிமாறினார். எல்லோரும் திருப்தியாக சாப்பிட்டு இதை போல் முன்பு எப்பொழுதும் சாப்பிடவில்லை என்று நினைத்துக் கொண்டு தாம்பூலம் எடுத்துக் கொண்டு சென்றார்கள். பிறகு ஸ்ரீகுரு ஊரிலுள்ள மற்றவர்களெல்லோரையும் அழைத்து வந்து சாப்பிடச் சொன்னார். பாஸ்கர் சர்மா அதேபோல் எல்லோரையும் அழைத்து வந்து, அனைவருக்கும் உணவு அளித்து மரியாதை செய்து, ஊரில் சாப்பிட யாருமில்லை என்று தெரிந்து கொண்டு அவரும் மற்றும் உணவு பரிமாறிய அவர்களும் சாப்பிட்டார்கள். பிறகு ஸ்ரீகுரு பாத்திரங்கள் மேலிருந்த துணியை எடுக்கச் சொன்னார். துணி எடுத்துப் பார்த்த பொழுது அவர் செய்த உணவு முழுவதும் அப்படியே இருந்ததை குருவிடம் சொன்னார். ஸ்ரீகுரு "அதை பீமா நதியில் போடுங்கள். தண்ணியில் இருக்கும் பிராணிகளெல்லாம் சாப்பிடட்டும்" என்று கூறினார். அவரும் அப்படியே செய்து ஸ்ரீகுருவை வணங்கி ஏழையான தனக்கு நாலாயிரம் பேருக்கு அன்னதானம் செய்து வைத்த பாக்கியம் அளித்ததற்கு நன்றி தெரிவித்தார். ஊரிலுள்ளவர்களெல்லாம் சிறிது உணவை வைத்து நாலாயிரம் பேருக்கு அன்னதானம் செய்த குரு லீலையை கண்டு ஆச்சரியம் அடைந்தனர். ஸ்ரீகுரு சாட்சாத் அந்த அன்னபூர்னேசுவரிதான். அவரின் அருளை பெற்றவர்களுக்கு எந்த குறையும் இருக்காது என்று எண்ணினார்கள். அப்பொழுது பாஸ்கர சர்மாவை சகல செல்வத்துடன் ஆனந்தமாக வாழ்வாய் என்று ஆசிர்வதித்து வீட்டுக்கு அனுப்பினார். இந்த லீலையினால் ஸ்ரீகுருவின் மகிமை நாலாதிக்குகளுக்கும் பரவிற்று.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*